ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௰. பவ௵ ஆனி-ஆடி௴ பகுதி ௰௧, ௰௨.

Vol. 10. June, July & August. **No. 11, 12.**

ஜீவித சந்தாதார்கட்கு அறிவிப்பு.

நமது திவாகரம் எம்பெருமான்திருவருளால் இனிது நடைபெற்று வருவதை யாவருமறிவர். இதுவரைப் பத்தாண்டுகளும் நிறைவேறின. திவாகரம் முதலிற்றோன்றிய காலத்தில், இதனை ஆதரிக்க முன் வந்தவர் பலராவர். அப்பொழுது இவர்கள் உபகாரம் எங்கட்குப் பெரிதும் மகிழ்ச்சியை விளைவித்தது. அதன்மேல் இந்தத் திவாகரத்தை மூலமாகவைத்து நமது ஸம்ப்ரதாயத்தை விர்த்திசெய்யவேண்டுமென்று கருதி, ஓர் அச்சியந்திரசாலையும் ஸ்தாபித்து ஜீவித சந்தாதார்களையும் சேர்ப்பதற்கு முயன்றோம். இதுவரை நூறு ஜீவித சந்தாதார்களேனும் பூர்த்தியாகச் சேர்ந்தார்களில்லை. இதுவிஷயத்தில் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவில்லையென்று குறை கூறுவதற்கு மிடமில்லை. பலவூர்களிலுள்ள ஆஸ்திகாபிமானிகளைப் பன்முறை சந்தித்துப் பத்திரிகையை யாதரிக்கவேண்டுமென்றெடுத்துரைத்ததற்களவில்லை. இங்ஙனமெடுத்துரைத்தபோது அவர்கள் இனிதாகக் கேட்டுக்கொண்டிருந்து; பின்னர் அதனை மறந்துவிடுவதை அநுபவத்திற் கண்டு தெளிந்தோம்.

ஸ்ரீ பாஷ்யகாரரின் அபராவதாரமாக அவதரித்த விசதவாக்சிகாமணியாகிய மணவாளமாமுனிகள், "பண்டுபலவாரியரும் பாருலகோருய்யப் பரிவுடனே செய்தருளும் பல்கலைகடம்மைக், கண்டதெல்லாமெழுதியவை கற்றிருந்தும் பிறர்க்குக் காதலுடன் கற்பித்தும் காலத்தைக் கழித்தேன்" என்றருளிச் செய்துள்ளார். இதனால் பழைய நூல்களைப் பரிபாலனஞ் செய்வதும், அந்நூலின் பொருள்களைப் பிறர்க்கெடுத்துரைப்பதும் சிறந்த கைங்கர்யமாகுமென்று தோற்றவில்லையா? பிரமாணமாகிய பண்டை நூல்

களையும், அந்நூன்முறையைப் பின்பற்றிச் செல்கின்ற நூல்களையும் பரிபாலிக்காதபோது, பிரமேயஸித்தி எங்ஙனமுண்டாகும்? ஸ்ரீ பாஷ்யகாரர் சாரதாபீடத்திற்கெழுந்தருளிப் போதாயனவிர்த்திக் கிரந்தத்தைக் கடாக்ஷித்துப் பின்னர் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யமருளிச்செய்தாரென்பது பிரஸித்தமன்றோ! அந்த விர்த்திக்ரந்தம் எவ்வளவோ உபகாரத்தை அளித்ததென்பதைக்கற்றறிந்த வல்லுநர் நன்கறிவர். இதனாலும் நூல்களைப் பரிபாலிப்பது சிறந்த கைங்கர்யமாகுமென்று துணியலாகும்.

தற்கால நிலைமைக்கேற்றவாறு பண்டை நூல்களின் பொருள்களை எளிதில் அறிவிப்பதற்குப் பத்திரிகை இன்றியமையாததாயிருக்குமென்பதைப் பன்முறை தெரிவித்துள்ளோம். தெரிவித்தவுரையெல்லாம் வீணாயினவென்று வெறுப்புண்டாகிறது. இருள்தருமா ஞாலமாகிய இந்த லீலாவிபூதியானது, எல்லோரையும் நல்வழிப்படுத்த அவதரித்த கண்ணபிரான் தன்னுடைச் சோதிக்கெழுந்தருளும்போது "அவஜாநந்திமாம்மூடா:" என்று வெறுப்புடனெழுந்தருளும்படி செய்தது. மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வாரும் முன்னர் "நின்கண்வேட்கையெழுவிப்பனே" என்று பரோபதேசஞ்செய்ய உத்ஸாகத்தோடெழுந்தனர். பின்னர் உலகினர் உபதேசவழியில் திரும்பாதிருத்தலைக்கண்டு "ஆரானும் ஆதானும் செய்ய அகலிடத்தை, ஆராய்ந்து அது திருத்தலாவதே" என்று வெறுத்தனர். இதனான் எவர்க்கும் வெறுப்பினை விளைவிப்பதே இந்த லீலாவிபூதியின் இயல்பென்பது தோற்றுகிறது.

நிற்க, தேசியக் கட்சிகளும் நாஸ்திகவாதம் முதலியவைகளும் விருத்தியடைகின்ற இக்காலத்தில் நமது சமயத்தின் பொலிவுகுன்றி வருகிறது. சமயநூல்களைப் பயில்பவர்களோ மிகவும் அருகினர். ஆதலால் நமது திவாகரத்தை ஆதரிப்பார் இல்லை என்று துணிந்து சொல்லும் காலம் நேர்ந்துவிட்டது. சாதாரண சந்தாதாரர்களால் ஏற்படும் நஷ்டத்தைக் குறித்து அடிக்கடி தெரிவித்துள்ளோம். இனி அந்த நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளும் நிலைமையும் இல்லை. ஆதலால் இந்தப் பத்தாவது ஆண்டு முடிவுற்ற இதன்மேல் சாதாரண சந்தாதார்கட்குப் பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிட்டோம். ஐந்து பாரம நாற்பது பக்கமுள்ள சஞ்சிகை மூன்று மாதத்திற்கொருமுறை ஜீவித சந்தாதாரர்கட்கு மாத்திரம் அனுப்புவதாக ஏற்பாடு செய்துளோம். இம்முறை தவறாது எப்போதும் நடைபெற்றுவரும். யுவவருடம் சித்திரை மாதம் முதல் இம்முறை கையாளப்படும். இதில் நம் பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த பழைய க்ரந்தங்கள் குறிப்புரையுடனும், ஏனைய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வெளிவரும். இதற்குச் சாதாரண வருடச் சந்தா ரூபா ஒன்று. வேண்டுவோர் முன்னரே மணியார்டர் மூலமாய் ரூபா அனுப்பினால் பத்திரிகை அனுப்பப் பெறும். இனி எம்பெருமான் திருவருளால் ஆதரிப்பார் மிகுதியானால் முன்னர் நடத்தியது போல் நடத்தலாகும்.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

"அண்டகோள மெய்ப்பொருள்"

விஷய சோதனம்.

(214-ம் பக்கத் தொடர்ச்சி)

9-ம் பக்கம் மூன்றாவதுவரி தொடங்கி, "மரத்தின் அவயவமாகிய கொம்பு இலை பூ காய் கனி முதலிய எவையும் மரத்தின் வேறு காத் தன்மையால் ஒருமை நன்கறியலாகும். இவ்வொருமையினையே* கம்பநாடர்,

"அம்போருகனாரானாறியார்
எம்போலியரெண்ணுநினென்பலவாம்
கொம்போடடைபூக்கனிகாயெனினும்
வம்போமரமொன்றெனும்வாசகமே"

என்பதனால் இனிது விளக்கினார். இவருக்கு இவ்வாழ்வாருடைய திருப்பாட்டு நோக்கென்பதும் பொருந்தும். "சங்கக் குவடிநக்குத்

---

* அண்ட கோளத் தாரணு வாகிப்
பிண்டம் பூத்த பேரொழி லொருமை
யீருயிர் மருங்கி னாருயிர் தொகுத்து
நித்திலத் தன்ன வெண்மணற் பரப்பில்
வேரும் வித்து மின்றித் தானே
தன்னிலை யறியாத் தொன்மிகு பெருமா
மூவழி முப்பழ முறைமுறை தருதலி
னொன்றுண் டொண்சுவை தருவது மற்றது
கல்வி னெழுந்து கடலி னழுந்தி
யறுகாற் குறவ னீரற விளக்குஞ்
செறிபொழிற் குப்பை தருகட் பொன்றுவித்
தறுகோட் டாமா விளக்கு காட
னவனே தலையிலி யவன்மகன் மூலையிலி
தானு மீனு ரீனவும் படாஅ
னெழுவர் மூவர் சிறுவரைப் பயந்தன
னவனிவ னுவனென வறிதல்
தவளறு காட்சிப் புலவரது கடனே.

திய மாறப் பெயர்க் கொலையாளே'' எனச் சடகோபரந்தாதியில் ஆழ்வார் சங்கம் வென்றருளிய செய்தியை வெளியிடுதலான் இஃதுணரலாம்.'' என்று குறிப்பிடப்பட்டுளது.

மெய்ப்பொருணூலுடையார் மரத்தின் அவயவமாகிய கொம்பு இலை முதலியவைகளும், அவயவியாகிய மரமும் ஒன்றென்கிறார். கண், கை, கால், செவி முதலிய உறுப்புக்களும், உறுப்பியாகிய சரீரமும் ஒன்றென்று சொல்லுகிற வழக்குண்டோ? கிளை காய் கனி முதலிய அவயவங்கள் சமவாய சம்பந்தத்தால் அவயவியாகிய மரத்திலிருக்கின்றன. சேர்க்கையின்றிச் சித்தித்த இரண்டன் சம்பந்தம் சமவாயமாம். அவயவாவயவி என்ற இரண்டும் நீக்கமின்றி யிருப்பன. அவயவமானது அவயவியைப் பிரியாது பற்றிநின்று தன்னாசத்தால் அவயவி நாசமாகுமென்பது நூலறிஞர் கண்டமுறை. அவயவாவயவி இரண்டும் ஒன்றென்று எவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அவயவாவயவிகளை வேற்றுமையில் ஒற்றுமைஎன்று வழங்குவதுண்டு.

மெய்ப்பொருணூலுடையார் அவயவாவயவிகள் இரண்டும் ஒன்றேயன்றி வேறுபாடுடையனவல்ல என்று தாமுரைத்ததை நிலைகாட்டுவதற்காக மஹாகவியாகிய கம்பரும் இங்ஙனமே உரைத்துள்ளாரென்று,

> ''அம்போருகனாரணனாதியார்
> எம்போலியரெண்ணுறினென்பலவாம்
> கொம்போடடைபூக்கனிகாயெனினும்
> வம்போமரமொன்றெனும்வாசகமே''

இச்செய்யுளை எடுத்துக்காட்டுகிறார். இது பெரிதும் முரண்பாடுடையதென்பது விளக்கலாகும். இச்செய்யுள் இரணியன்வதைப் படலத்தில் இரணியன் ப்ரஹ்லாதனை ஆழியிலெறிவித்தகாலத்தில் அவன் ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபரூப குணங்களையுரைத்துப் பாராயணஞ்செய்கின்றபுடையில் அமைந்துள்ளது. இச்செய்யுளின் முன்னருள்ள செய்யுளிற்கும் இதற்கும் தொடர்புண்மையால் அச்செய்யுளின் பொருள் உணர்ந்த பின்னரே இதன் பொருளுணரத்தக்கது. ஆதலால் முன்னர் அச்செய்யுளின் பொருள் ஆராயப்படும். செய்யுள் வருமாறு.—

"ஆதிப்பரமாமெனிலன்றெனலாம்
ஓதப்பெருநூல்களுலப்பிலவால்
பேதிப்பனநீயவைபேர்கிலையால்
வேதப்பொருளே விளையாடுதியோ"

என்பதாம். பேதிப்பன நீ அவை பேர்கிலையால், வேதப் பொருளே விளையாடுதியோ, ஆதிப்பரமாமெனின் அன்றெனலாம், ஓதப்பெரு நூல்களுலப்பிலவால் எனக்கூட்டுக. பேதிப்பன-பேதமாகிய தர்மங்களையுடையன. அவை சித்துப்பொருளும், அசித்துப்பொருளுமாம், சித்துப்பொருளாகிய ஆத்மா ஞானத்திற்கிருப்பிடமானது. அசித்துப்பொருள் ஞானசூந்யமாயிருப்பது. இவை ஒன்றற்கொன்று பெரிதும் பேதமுடையனவாதலால் பேதிப்பன என்றான். நீபேர்கிலை—தன்னோடு கலந்து ஏகிபவித்திருந்த சிதசித்துக்களைப் பேதம் தோன்றும்படி செய்தபின்பும் அவற்றைவிட்டு நீங்காதிருக்கின்றாய். நீங்காதிருப்பது சேதனசேதனங்கள் சத்தை பெறுதற்காக. இதனால் சேதனசேதனங்கள் சரீரம் என்பதும், அவன் சரீரி என்பதும் போதரும். வேதப்பொருளே—வேதத்தாற் சொல்லப்படுகின்ற பரம்பொருளே. இங்ஙனம் ஸர்வசரீரியாயிருப்பவனே வேதத்தாற் சொல்லப்படுகின்ற பரம்பொருளாவானாதலால் வேதப்பொருளே என்றான். விளையாடுதியோ—விளையாடுகின்றனையோ. உன் விளையாட்டை என்னென்பது. காரணாவஸ்தையில் அசித்துக்குள்ள ஸூக்ஷ்ம பரிணாமமும், சேதனனுக்குள்ள ஜ்ஞாந சங்கோசமும் காரியாவஸ்தையில் அசேதனத்திற்குள்ள ஸ்தூல பரிணாமமும், சேதனனுக்குள்ள ஸ்வபாவ வேறுபாடும் சரீரியான தனக்கு வாராதிருக்கச்செய்யும் விசித்ரசெயலென்பான் விளையாடுதியோ என்றான். அன்றி, "லோகவத் லீலா கைவல்யம்" என்ற ஸூத்ரத்தில் உரைத்தபடி ஸ்ருஷ்டிக்குப்பிரயோஜனம் லீலாமாத்திரமே என்பதை உட்கொண்டு 'விளையாடுதியோ' என உரைத்ததாகவும் கொள்ளலாம்.

ஆதிப்பரமாமெனின்-ஸ்ருஷ்டியாதிகார்யங்களை விளையாட்டாகக் கொண்டு வேதப்பொருளாய் விளங்கும் உன்னை ஸர்வகாரணமாகிய பரம்பொருளென்றுரைக்கில், அன்றெனலாம்— நீ பரம்பொருளாக மாட்டாய் என்றுரைக்கலாமோ? ஆகாது. எதிர்மறை ஓகாரம் செய்

யுள் விகாரத்தாற் றெக்குநின்றது. ஓதப்பெருநூல்கள் உலப்பில— உன்னுடைய ஸ்வரூபஸ்வபாவமுழுமையும் ஓதியுணர ப்ரமாணங்களில் தலை சிறந்தனவாகிய வேதங்களோ முடிவற்றனவாகவிருக்கின்றன. பெருநூல் என்றது வேதத்தை.

இங்ஙனம் முடிவற்றனவாகிய ப்ரமாணங்களைக் கொண்டு முடிவற்றனவாகிய இறைவனது குணங்களை அதிகாரிபுருஷர்களாலும் அறிதற்கு அரிதென்கிறான், "அம்போருகனார்" என்ற செய்யுளால்.

அம்போருகனார் அரனார் அறியார்— ஸ்ருஷ்டிகர்த்தாவாகிய ப்ரஹ்மதேவனும் ஸம்ஹார கர்த்தாவாகிய சிவனும் இறைவனது அனந்த கல்யாண குணங்களை யறியமாட்டார்கள். அனந்த கல்யாண குணமென்பது அவாய்நிலையான் வந்தது. ப்ரஹ்மதேவனுக்குப் பல பெயர்களிருக்க, ஈண்டு அம்போருகனார் என்றுரைத்ததால் "நேரே கடிக்கமலத் துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணன், அடிக்கமலத் தன்னை யயன்" என்றபடி இறைவன் உந்திக்கமலத்திலிருந்தும் அவனையறியான் என்றபொருள் கிடைக்கிறது. எம்போலியர் எண்ணுறின் என்— அதிகார ஸம்பத்துச் சிறிதுமில்லாத எம்போன்றவர்கள் ஆராயனுறில் என்ன பிரயோஜனம்? தன்னோடு உஜ்ஜீவனகாமரையும் உளப்படுத்தி எம்போலியரென்றான். "அம்போருகனார் அரனாரறியார், எம்போலியர் எண்ணுறில் என்" என்று கைமுதிக நியாயந் தோன்றக் கூறியதனால் இது, அர்த்தாபத்தி அலங்காரமாம்.

என்போன்றவர்களால் அறியவொண்ணாதென்பது ஒருபுறமிருக்க, தகப்பனாற் கடலில் தள்ளப்பட்ட எனது ஸத்தைக்குத் தாரகன் அவனே என்பதை அவனருளால் கண்டேனாதலால் விசேஷணாம்சத்தால் யான் வேறாகத் தோற்றினாலும், விசிஷ்டாம்சத்தால் அவனின் யான் வேறில்லையென்பதை வெளிப்படுத்துகிறான்:—கொம்போடு அடை பூ கனி காயெனினும்—விசேஷணாம்சத்தால் கிளை இலை பூ கனி காய் என்ற வேறுபாடு தோற்றினாலும், மரம் ஒன்று எனும் வாசகம் வம்போ—விசிஷ்டாம்சத்தால் மரம் ஒன்றேயென்று உலகில் வழங்குகிற சொல் புதுமையோ? அதுபோல அவனருள்பெற்ற எனக்கு அவன் சேதனாசேதனங்களைச் சரீரமாகக்கொண்டு தான்

சரீரியாகவிருக்கிறான் என்ற உணர்ச்சி தோன்றுவது புதுமையன்று; இயல்பேயாம். ஸ்வரூப ஜ்ஞாநம் பிறந்தால் சேதனனுக்கும் ஈசுவரனுக்குமுள்ள ஸம்பந்தம் ஸ்வாபாவிகமென்று தோன்றுமென்பது கருத்து. "கொம்போடடை பூக்கனி காய் எனினும், வம்பே மரமொன்றெனும் வாசகம்" என்பது நவலாநவற்சியணியாதலால், எல்லத்தைக்குத் தாரகன் அவனையாதலால் விசேஷணம்சத்தால் யான் வேறாகத் தோற்றினும் விசிஷ்டாம்சத்தால் அவனின் யான் வேறில்லையென்னும் தொக்குநின்ற சொற்றொடர், முன்னர் வருவித்துரைக்கப்பட்டது. இப்பாட்டில் முன்னிரண்டடி அருத்தாபத்தியணியும், பின்னிரண்டடி நவலாநவற்சியணியும தோன்றவந்தமையால் இது சங்கீரணவணியின்பாற்படும.

ஆக இந்த இரண்டு செய்யுட்களும், ஒன்றற்கொன்று பொருளியைபுடையனவாய், விழுமிய பொருளுவல்லனவாய் வந்தமை நன்கறியலாகும். மெய்ப்பொருளுாலுடையார் கருதுகிறபடி "அம்போருகனர்" என்ற செய்யுள் அவயவாவயவிகளின் அபேதத்தையுரைப்பதற்கெழுந்ததென்று கொள்வதற்கிடமில்லை. அவர் கருதுகிறபடி ஒப்புக்கொண்டு அப்பாட்டின் முன்னிரண்டடிகளையும் இயைத்துப்பார்த்தால் மரத்தின் அவயவமாகிய கொம்பு இலை முதலியவையும், மரமும் வெவ்வேறில்லை ஒன்றேயாம் என்பதை அம்போருகனும் அரனும் அறியாரென்ற பொருள் தோனறும். இதில் தோன்றும் நயமென்னே? இது சிறந்த பொருளாமென்று எவரேனும் கருதுவரோ?

மேலும், மெய்ப்பொருளுாலுடையார் கம்பர் "சங்கக்குவடிறக் குத்திய மாறப் பெயர்க்கொலையானை" என்று ஆழ்வார்சங்கம்வென்ற செய்தியைக் குறிப்பிடுகின்றாராதலால், இவர் "அண்டகோளத் தாரணு" என்ற பாசுரத்தை உணர்ந்திருத்தல்வேண்டும், ஆதலால் அந்தப் பாசுரத்தின் கருத்தை யுட்கொண்டே "அம்போருகனர்" என்ற செய்யுளையுரைத்துள்ளார்; என்கிறார். இது சிறிதும் பொருந்தாது. கம்பர் இப்பாட்டின் உட்பொருளைக்கொண்டு "அம்போருகனர்" என்ற செய்யுளையுரைத்துள்ளார் என்பதை மெய்ப்பொருளுாலுடையார் நிரூபிக்கவேண்டுமானல் இரண்டுசெய்யுட்களிலுமுள்ள பதப்பொருளின் ஒற்றுமையையும், விசேடண விசேடியக்குறிப்புக்

களையும், இன்றியமையாப்பதஸாரங்களையும் எடுத்துரைத் திருத்தல் வேண்டும். இவையொன்றும் எடுத் தியம்பினரில்லை. "அண்டகோளத்தாரணு" என்ற பாட்டில் "ஒருமைமரம்" என்றும், "அம்போருகனார்" என்ற பாட்டில் "மரமொன்றெனும் வாசகம்" என்றும் பயின்றுவந்துள்ள இவ்வளவுமாததிரங்கொண்டு மெய்ப்பொருணூலுடையார் இரண்டு பாசுரத்திற்கும் கருத்தொப்புமை கற்பிப்பதும் பெரிதும் வியப்பை விளைவிக்கிறது!

9ம் பக்கம் 17வதுவரி தொடங்கி "ஸ்ரீபாகவதம் 'தருவினடியில் நீர் விடுவது அதன் கொம்பு கிளைகட்கு எங்ஙனமாகுமோ அங்ஙனமே விஷ்ணுவின் ஆராதனம் எல்லாப்பிராணிகட்கும் பயன்படுவது' (அத்-5-49) என்று கூறுதலான் மரமும் கிளைகளும் போலப் பரதெய்வமும் பிராணிகளும் நன்கறிந்துகொள்க." என்று குறிப்பிடப்பட்டுளது.

மெய்ப்பொருணூலுடையார் குறிப்பிட்ட எட்டாவது ஸ்கந்தம் 5வது அத்யாயம 49வது ச்லோகத்திற்கு முன்னுள்ள "நாவம: கர்மகல்போऽபி விபலாயேச்வரார்பித: । கல்பதே புருஷஸ்யைவ ஸ ஹ்யாத்மா தயிதோ ஹித: ॥" என்ற இந்த ச்லோகமானது ஸர்வேசுவரன் அந்தராத்மாவாயிருப்பதால் அல்ப கர்மமாகவிருந்தாலும் கர்மலோபியாக விருந்தாலும அவை அவன் விஷயமாக அர்ப்பணம் செய்யப்படுமானல் வீணாவதில்லை என்ற பொருளைக் குறிப்பிடுகிறது. அடுத்த 49வது ச்லோகம் இறைவனுடைய ஆராதனமானது வீணாகா திருப்பதோடு அளவிடவொண்ணாத பலத்தையுந் தரவல்லது என்பதை த்ருஷ்டாந்தமுகத்தாலே உணர்த்துகிறது. அது வருமாறு:—

"யதா ஹி ஸ்கந்தசாகாநாம் தரோர்மூலாவஸேசநம் ।
ஏவமாராதநம் விஷ்ணோ: ஸர்வேஷாமாத்மநச்ச ஹி ॥"

இதன் பொருள்:—விருக்ஷத்தினடியில் நீர்விடுவது வேருக்கும் கிளைகட்கும் எங்ஙனமாமோ அங்ஙனமே விஷ்ணுவின் ஆராதனம் தனக்கும எல்லாப்பிராணிகட்கும் பயன்படுவது என்பதாம். இந்த ச்லோகத்தில் விஷயவாக்யம், த்ருஷ்டாந்த வாக்யம் என்ற இரண்டு வாக்யம் அமைந்துள்ளன. த்ருஷ்டாந்தவாக்யம் விஷயவாக்யத்தைத்

தெளிவிக்கத் தோன்றுவதால் விஷயவாக்யமே சிறந்ததாகும். இங்கு விஷ்ணுவின் ஆராதனம் ஒன்றே தனக்கும் எல்லாப்பிராணிகட்கும் பயன்படுவது என்ற பொருளையுந்த விஷயவாக்யமே சிறந்ததாம். இதனை மெய்ப்பொருளுடையார் மறந்து இந்த ப்ஸ்லோகத்திலுள்ள த்ருஷ்டாந்த வாக்யமே முக்யார்த்தமாகக் கொண்டு "மரமும் கிளைகளும்போலப் பரதெய்வமும் பிராணிகளும் உண்மை நன்கறிந்து கொள்க." என்றுரைக்கின்றார். இவர் இங்ஙனம் உரைப்பது, "அடக்க முடையார் அறிவிலரென்றெண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டா— மடைத்தலையில், ஓடுமீன்ஓட உறுமீன் வருமளவும், வாடியிருக்குமாம் கொக்கு" என்றபாட்டிற்கு உறுமீன்வருமளவும்வாடியிருக்குமகொக்கு என்பது முக்யார்த்தமாம் என்றுரைப்பது போலிருக்கிறது. பெரும் பாலும் த்ருஷ்டாந்தம் உலகிலறியப்பட்ட பொருளைக்குறிப்பிடும். இங்ஙனம் குறிப்பிடுகின்ற இதுவே முக்யார்த்தமாகுமானல் உலக வழக்காலே எல்லாமறிந்துகொள்ளலாம். நூல்வழக்கென்பது வேண்டுவ தில்லை. மேலும் மெய்ப்பொருளுடையார் இங்குரைத்த "விருக்ஷத்தினடியில் நீர்விடுவது வேருக்கும் கிளைக்கும் எங்ஙனமாமோ" என்ற த்ருஷ்டாந்த வாக்யத்தை யுள்ளவாறு கூறுமல் மரமுங் கிளைகளும் ஒன்றெனக் கூறும் தம்முடைய கொள்கைக்கேற்றபடி "மரமும் கிளைகளும் போல" என்று மாற்றிக்கொள்ளுகிறார். சமயநெறியைப் பின்பற்றுவதற்காக இவர் இங்ஙனம் மாற்றிக்கொண்டாரென்றுங் கொள்வதற்கிடமில்லை. பரம வைதிக சித்தாந்தத்தில் பிதா புத்ர ஸம்பந்தந் தொடங்கி ஒன்பது ஸம்பந்தம் ஈசுவரனுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் உண்டென்று சொல்லப்பட்டுளது. இந்த ஒன்பதுவகைச் சம்பந்தத்தில் அவயவாவயவிசம்பந்தஞ் சொல்லவில்லை. மெய்ப்பொருளுடையார் இந்தச்லோகத்திலுள்ள த்ருஷ்டாந்த வாக்யத்தைத் தம்மிஷ்டப்படி மாற்றிக்கொண்டு ஈசுவரனுக்கும ஜீவர்கட்கும் அவயவாவயவிசம்பந்தமுண்டென்றுரைப்பது புதுமையாகவிருக்கிறது.

9வது பக்கம் 20வது வரி தொடங்கி " இந்தப் பாகவதத்தார் கருதிய ஒருமையையே ஆழ்வார் திருவுள்ளம்பற்றினரென்பது, பூத்த என்னும் வினையாற் பிண்டங்களை மலர்களாக்கியதனுனும், அம்மலர்களை யுண்டாக்கிப் பரிபாலிக்குங்கிலயில் மலரின் வேறுகாத மாமாகப்

பரதெய்வத்தை உருவகப்படுத்தியதனுலும் இனிது துணியலாம்.'' என்று குறிப்பிடப்பட்டுளது.

இங்கு ஆழ்வார் "பிண்டம் பூத்த பேரெழில் ஒருமை மரம்" என்ற தொடரினை இந்தப் பாகவதச்லோகத்தாற் கருதிய ஒருமையினை யுட்கொண்டு அருளிச்செய்தாரென்று மெய்ப்பொருளுணர்வுடையார் உரைக்கின்றார். இந்த ச்லோகத்தில் த்ருஷ்டாந்த வாக்யத்தை முக்யார்த்தமாகக் கொண்டதும் தவறு. இந்த த்ருஷ்டாந்தத்தை "மரமும கிளைகளும் போல" என்று மாற்றிக்கொண்டதும் பிழை. மரமும் கிளைகளும் அபேதமாமெனக் கூறுவதும் குற்றம். இங்ஙனம் முக்குற்றமுடையதை ஆழ்வாருட்கொண்டு அருளிச்செய்தாரென்று மெய்ப்பொருளுணர்வுடையார் துணிந்து கூறுவது பெரும் வியப்பே! "பூத்த என்னும் வினைபாற் பிண்டங்களை மலர்களாக்கிய தனுலும், அம் மலர்களை யுண்டாக்கிப் பரிபாலிக்கு நிலையில் மலரின் வேருகாத மரமாகப் பரதெய்வத்தை உருவகப்படுத்தியதனுலும்" என்ற தொடர்கட்கு மறுப்பு முன்னரே உரைக்கப்பட்டது.

9வது பக்கம் 27ம் வரிதொடங்கி "இவ்வொருமை ரக்ஷ்ய ரக்ஷக பாவாதி ஸம்பந்தத்தாலுளதாவதல்லது ஸ்வரூப ஐக்கியமாகாமை உய்த்துணர்ந்து கொள்க. 'பாரிடமாவானுந் தான்' (42) என்னும் பெரியதிருவந்தாதித் தொடர்க்குப் பெரியவாச்சான்பிள்ளையாசிரியர் "ரக்ஷ்ய ரக்ஷக பாவாதி ஸம்பந்தத்தால் ஐக்யம்; ஸ்வரூபத: அன்று' என்றுரைத்தவாற்ருன் உணர்க" என்றுரைக்கப்பட்டுள்ளது.

"இவ்வொருமை ரக்ஷ்ய ரக்ஷகபாவாதி சம்பந்தத்தாலல்லது ஸ்வரூபைக்ய மாகாமை உய்த்துணர்ந்துகொள்க" எனறு மெய்ப் பொருளுணர்வுடையார் கூறுவது அசமபவமே. இவர் கூறும் இத் தொடர்மொழி ஆவிற்கு ஒற்றைக் குளப்புண்மை உணர்ந்துகொள்க என்பதுபோல் அமைந்துளது. இவர் ஒருமைக்குச் சம்பந்தம் கற்பிக்கின்ருர். ஒருமைக்குச் சம்பந்தம் எங்கேனும் கண்டதுண்டோ? சம்பந்தம் இரண்டுபொருளைப்பற்றி நிற்கும் என்பதை மறந்தனர் போலும்! முயலுக்குக் கொம்பாதிகளுண்டு என்பதுபோல ஒருமைக்கு ரக்ஷ்யரக்ஷகபாவாதி சம்பந்தமுண்டென்கிருர், ஒருமைக்கு ரக்ஷ்ய

ரக்ஷக சம்பந்தமேயில்லை. அஃதில்லாதபோது ஆதிசப்தத்தால் இதற்கு வேறு சம்பந்தம் எப்படி சித்திக்கும்? இங்ஙனம் இரண்ட சம்பவத்தைக் கூறியதோடொழியாது "ஸ்வரூபைக்ய மாகாமை உய்த்துணர்ந்துகொள்க." என்று மற்றுமோர் அசம்பவத்தைக் கூறுகிறார். இவர் கருதுகிறபடி இதில் ஸ்வரூபைக்யம் கொள்வதற்குச் சிறிதேனுமிடமில்லை. இடமிருந்தாலன்றோ ஸ்வரூபைக்யங்கொள்வது ஸித்தாந்த விரோதமென்று அதனை நிஷேதித்து வேறு ஸம்பந்தப்பொருள் தந்துரைத்தல் வேண்டும். ஸ்வரூபைக்ய வாக்யமாவது—வெவ்வேறு தர்மமுடைய பொருள்கள் ஒன்றெனக் கருதுமா றுரைப்பதாம். "பாரிடமாவானும்தான்" என்ற பெரியதிருவந்தாதியிற்கண்ட தொடர், பிரபஞ்சமும் ஈசுவரனும் ஒன்றெனக் குறிப்பிடுவதால் ஸ்வரூபைக்ய வாக்யமாம். இங்ஙனம் ஸ்வரூபைக்யம் கொள்வது ஸித்தாந்த விரோதமென்று அதனை வியாக்யாதாவாகிய பெரியவாச்சான் பிள்ளை பரிகரிக்கிறார்.—"ரக்ஷ்யரக்ஷகபாவாதி ஸம்பந்தங்களாலே ஐக்கியம். ஸ்வரூபத: அன்று." என்று. இங்ஙனம் ப்ரகரணம், தகுதி, லிங்கம் முதலியவற்றை ஆராய்ந்து பொருளுரையாமல் எப்பொருளையும் எவ்விடத்திலும் உரைக்கலாமென்று மெய்ப்பொருணூலுடையார் கருதி ஈண்டுப்பெரியவாச்சான்பிள்ளை எடுத்துக்காட்டியதை மேற்கோளாக வெடுத்தெழுதியதை அறிஞர் கண்ணுறின்யாது கருதுவர்?

தொடரும்.

கோபாலகிருஷ்ண பிள்ளை,

மதுரை.

ஸ்ரீ:

தொண்டக்குலம்.

சாஸ்திரங்களில் தேகத்தோடுகூடிய ஆத்மாவைக் குறித்து வியவஹரிக்கும் குலமொன்றும், ஆத்மாவை மாத்திரம் பற்றிவரும் குல மொன்றுமாக இரண்டுவகைக் குல முண்டென்று சொல்லப்பட்டுளது. தேகத்தோடுகூடிய ஆத்மாவைக் குறித்து வியவஹரிக்குங் குலமாவன:—* க்ரம விவாஹத்தாலும், ‡ அநுலோம ப்ரதிலோம விவாஹத்தாலுமுள்ள குலங்களைத் தரிக்கும் ப்ரஹ்ம க்ஷத்ரிய வைசிய சூத்திரஜாதிகளும், இவற்றினிழிந்த ஜாதிகளுமாம். ஆத்மாவைப்பற்றிவரும் குலமாவது:— எம்பெருமானுக்கு ஆத்மா அடிமையாயிருத்தலைக் குறிப்பிடுவதாம். அடிமையாயிருத்தலாகிய இயல்பு ஆத்மாவிற்கொரு காலத்தில் தோன்றியதில்லை; நித்யமாயுள்ளதாம். ப்ரஹ்ம க்ஷத்ரியாதி குலம் தேகத்தைப்பற்றி வருவனவாதலால் அழிவுடையனவா யிருக்கும். "பூதங்களைந்தும் பொருந்துடலி னுற்பிறந்த, சாதங்கள் நான்கினொடும் சங்கதமாம்—பேதங்கொண்டென்ன பயன்பெறுவீர்... .." என்றதனாலும் தேகம் பற்றி ப்ராஹ்மணாதி ஜாதிகளுண்டாமென்பது வெளியாகும்.

ஆத்மாவை நல்வழிப்படுத்தலிலே நோக்குடையவர்கள், தேகம் பற்றி வருகிற குலத்தைப் பொருட்படுத்தாமல், அங்ஙனம் பொருட்படுத்துகின்றவர்களோ டுறவற் றுமிருப்பர்கள். இதனை, "பண்டே யுயிரனைத்தும் பங்கயத்தாள் நாயகற்கே, தொண்டா மெனத்தெளிந்த தூமனத்தார்க் — குண்டோ, பலகற்றும் தம் முடம்பைப்பார்த் தபிமானிக்கும், உலகத்தவரோ டுறவு"

---

* க்ரம விவாஹமாவது:—ப்ரஹ்ம க்ஷத்ரிய வைச்ய சூத்திரர்கள் அவ்வவ் வர்ணங்களில் செய்துகொள்ளும் விவாஹம்.

‡ அநுலோம விவாஹமாவது:—ப்ராஹ்மணன், க்ஷத்ரியன் முதலிய மூன்று வர்ணத்திலும், க்ஷத்ரியன், வைச்யன், சூத்திரன் என்ற இரண்டு வர்ணத்திலும், வைச்யன் சூத்திர வர்ணத்திலும் செய்துகொள்ளும் விவாஹம்.

ப்ரதிலோம விவாஹமாவது:—சூத்திரன் ப்ராமமணன் முதல் மூன்று வர்ணத்திலும், வைசியன், க்ஷத்ரிய ப்ராஹ்மணமென்ற இரண்டு வர்ணத்திலும்; க்ஷத்ரியன், ப்ராஹ்மண வர்ணத்திலும் செய்துகொள்ளும் விவாஹம்.

என்றதனால் அறியலாம். இங்கு ஒரு இதிஹாஸமும் அறியத்தக்கது. அது வருமாறு:—திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் பகவர் என்ற பெரியார் அவ்வூரிலுள்ள ஓர் தடாகத்தில் ப்ராஹ்மணரெல்லாம் நீராடுந்துறையில் இறங்காமல் தனியே ஒரு துறையிலிறங்கி அநுஷ்டானஞ் செய்துவருவது வழக்கம். இதனைக்கண்ட ப்ராஹ்மணர்கள் இவரை நோக்கி, 'நீர் தினந் தோறும் எங்கள் துறையிலிறங்கி அநுஷ்டானம் செய்யாமல் தனியே செல்கின்றீரே, நம்முடைய கருத்தென்னை?' என்று வினவினர். அப்பொழுது வில்லிபுத்தூர் பகவர் அவர்களை நோக்கி, "விஷ்ணுதாஸா வயம் யூயம் ப்ராஹ்மணா வர்ணபூஜிதா꞉। ஸ்வாதந்த்ர்யம் தாஸ வ்ருத்தீநாம் யுஷ்மாகம் நாஸ்தி ஸங்கதி꞉। நாஸ்தி ஸங்கதி ஸ்வாதந்த்ர்யம் யுஷ்மாகஞ்ச ஸர்வஶ꞉। வயந்து கிங்கரா விஷ்ணோ꞉ யூயமிந்த்ரிய கிங்கரா꞉॥" என்று விஷ்ணுதாஸர்களாய் அவனுகந்த தாஸ்ய்ருத்தியைச் செய்துகொண்டிருக்கும் எங்கட்கும் வர்ணதர்மிகளாய் தாஸ்ய விர்த்தியை மறந்து இந்த்ரிய வசப்பட்டுத்திரியும் உங்கட்கும் என்ன ஸம்பந்தமுண்டு? எனக்கருதி உங்கள் துறையை விட்டுத் தனியே சென்றேனென்றார்.

பெரியாழ்வார் ஐச்வர்யார்த்திகளை யழைக்கின்றபோது "அண்டக் குலத்திற்கதிபதியாகி அசுரரிராக்கதரை, இண்டக் குலத்தை யெடுத்துக் களைந்த விருடீகேசன்றனக்குத், தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடிதொழுதாயிர நாமம் சொல்லிப் பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே" என்று அருளிச் செய்தார். இங்குத் தொண்டக் குலத்தினர் ஜாதிபற்றி வருகிற அஹங்கார ஸ்வபாவங்களை யொழித்து எம்பெருமானுக்கு ஆட்செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டது.

இங்ஙனம் பண்டைக் குலத்தின் இயல்பொழித்துத் தொண்டக் குலத்தில் அந்வயித்தவர்களே சிறந்த பாகவதராவார். அவர்களே தமக்கு ஸ்வாமிகளாவார் என்று ஆழ்வார் "பயிலுஞ் சுடரொளி" என்ற திருவாய்மொழியில் "குலந்தாங்கு சாதிகள் நாலிலுங்கீழிழிந்தெத்தனை, நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும், வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுள், கலந்தார் அடியார் தம்மடியா ரெம்மடிகளே" என்று கொண்டாடுகிறார். மயர்வற மதிநல மருளப்பெற்ற பெரியாரே தொண்டக் குலத்தின் பெருமையைக் கொண்டாடுகிறாரென்றால் இதின் சிறப்பை எவ்வாறெடுத் தியம்புவது.

இனி ஆழ்வார் திருவுள்ளத்தைப் பின்பற்றிய ஆசார்யர்கள் தொண்டக் குலத்தின் சீர்மை யறிந்து தொண்டக் குலத்தினரோடு அளவளாவிய செய்தி குறிப்பிடப்படும். உடையவர் நீராடிக் கோஷ்டியுடன் எழுந்தருளு கிறபோது பிள்ளையுறங்கா வில்லிதாஸரை பரிசித்துக் காயசுத்தி செய்து கொண்டார். நம்பிள்ளை பிள்ளைஏறு திருவுடையார் தாஸரை ப்ரசாதத்தைக் காத்தால் பரிசிக்கும்படி செய்து அன்னசுத்தி செய்து ப்ரசாதஸ் ஸ்வீகாரஞ் செய்தனர். நடுவில் திருவீதிப் பிள்ளைபட்டர் உத்தரவீதி குடிபுகுந்தபோது பிள்ளை வானமாமலை தாஸர் ஸ்ரீபாத பரிசத்தால் இடம் பரிசுத்தமாயிற் றென்றனர். இதனை "யாகாநு யாகோத்தர வீதிகளில் காயாந்நஸ்தல சுத்தி பண்ணின வ்ருத்தாசார மறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது" என்ற ஆசார்ய ஹ்ருதய வாக்யத்தாலறியலாம்.

மேலும் இதுபோன்ற குறிப்புக்களை "மிலேச்சனும் பக்தனானால் சதுர் வேதிகளனுவர்த்திக்க வறிவுகொடுத்துக் குல தெய்வத்தோடொக்கப் பூஜை கொண்டு பாவநதீர்த்தப்ரஸாதனுமென்கிற திருமுகப்படியும், விச்வாமித்ர விஷ்ணுசித்த துளஸிப்ருத்யரோடே யுள்கலந்து தொழுகுலமானவன் நிலை யார் பாடலாலே ப்ராஹ்மண வேள்விக்குறை முடித்தமையும், கீழ்மகன் தலைமகனுக்கு ஸமசகாவாய் தம்பிக்கு முன்பிறந்து வேலும் வில்லுங் கொண்டு பின்பிறந்தாரைச் சோதித்து தமையனுக்கிளையோன் ஸத்பாவம் சொல்லும்படி ஏகுலமானமையும் தூதுமொழிந்து நடந்துவந்தவர்களுடைய ஸம்யக் ஸகுண ஸஹபோஜநமும், ஒருபிறவியிலே இருபிறவியானு ரிருவர்க்கு தர்மஸூநு ஸ்வாமிகள் அக்ரபூஜை கொடுத்தமையும், ஐவரில், நால்வரில், மூவரில் முற்பட்டவர்கள் ஸந்தேஹியாமல் ஸஹஜரோடே புரோடாசமாகச் செய்த புத்ரக்ருத்யமும், புஷ்பத்யாக போக மண்டபங்களில் பணிப்பூவும் ஆலவட்டமும் வீணையுங் கையுமான அந்தரங்கரை முடிமன்னனும் வைதிகோத்தமரும் மஹாமுனியும் அநுவர்த்திக்கரமமும்," என்ற ஆசார்யஹ்ரு தய சூர்ணையால் கண்கறியலாம்.

ஸ்ரீ ஆளவந்தார், ஸ்தோத்திர ரத்நத்தில் ஆழ்வாரைக்குறித்து ஸ்தோத் திரஞ் செய்கிறவிடத்தில் "மாதாபிதா யுவதயஸ் தநயாவிபூதிஸ், ஸர்வம்

யதேவ நியமேமதக்வயாகாம், ஆத்யஸ்ய: குலபதேர் வகுளாபிராமம், ஸ்ரீ மத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா" என்று அருளிச்செய்தார். இங்கு ஆளவந்தார் தம்மையும் தொண்டக்குலத்தினராக மதித்து ஆழ்வாரைக் 'குலபதி'யென் றுரைத்தனர். தம்மைத் தொண்டக்குலத்தினராகக் கருதாத போது ஆழ்வாரைக் "குலபதி:" என்றருளிச்செய்திருக்கமாட்டார். விசேஷ ஜ்ஞராயுள்ள பெரியார் சரீரம்பற்றி வியவஹரிக்கிற ஜாதியை ஒரு பொருளாக மதிக்கமாட்டார்கள். நித்யமாயுள்ள ஆத்மாவைப்பற்றி வருகிற தொண்டக்குலத்தையே முக்யமாகக் கருதுவர். "அஜ்ஞர் ப்ரமிக்கிற வர்ணாச்ரம வித்யாவருத்தங்களை கர்த்தப ஜந்மம் ஸ்வபசாதமம் சில்ப நைபுணம் பீஸ்மா ஹூதி சவ விதவாலங்காரமென்று கழிப்பர்கள்" என்பதும் இங்கறியத் தக்கது.

உண்மையாகத் தொண்டக்குலத்தில் அந்வயித்தவர்கட்குப் பண்டைக் குலத்தினியல்பு மாறிவிடும் என்பதை விபீஷணாழ்வான் விருத்தாந்தத்தா லறியலாம் :—

ஸ்ரீ விபீஷணாழ்வான் இராவணனுக்கு ஹிதம் கூறியகாலத்தில் அவனுக்கு அது மிகவும் வெறுப்புண்டாக்கியது. அப்பொழுது இராவணன் விபீஷணாழ்வானை நோக்கி "அஞ்சினையாதலின் அமர்க்குமாளலே, தஞ்சென மனிதர்பால் வைத்த சாபினே, வஞ்சன மனத்தினைப் பிறப்பை மாற்றினே, நஞ்சினை யுடன்கொடுவாழ்தல் நன்றரோ" என்றான். இங்கு விபீஷணன் தன்னோடுடன் பிறந்தவனாயிருப்பதறிந்தும், இராக்ஷஸ ஜாதிக்குள்ள க்ரூர ஸ்வபாவமில்லாமையையும், இராமபிரானிடத்திற் பற்றுள்ளவனாயிருப்பதையுங்கண்டு "பிறப்பை மாற்றினே" என்றான். விபீஷணாழ்வான் மந்திரிமார்கள் விபீஷணாழ்வானை நோக்கி "மாட்சியினமைந்தது வேறு மற்றிலே, தாட்சியிற் பொருட்குர் தருமமூர்த்தியைக், காட்சியே யினிக் கடனென்று கல்விசால், சூட்சியின் கிழவரூ துணிந்து சொல்லினா" என்றனர். இதனைக்கேட்ட விபீஷணாழ்வான், "நல்லது சொல்லினீர் நாமும் வேறினி, அல்லது செய்துமேலரக்கராது மால்" என்றுரைத்தான். இங்கு விபீஷணாழ்

வான் இராவணனுடைய சம்பந்தத்தைத் துறந்ததின்ற காரணம்பற்றித் தன்னை இராக்ஷஸ ஜாதியினின்றும் வேறுபட்டவனாகக் கூறினன். ' விபீஷணாழ்வான் இராமபிரானை அடைக்கலம் புகுந்தபின்பு, இராமபிரான் விபீஷணாழ்வானை நோக்கி "இராக்ஷஸர்களின் வலிமை முதலியவற்றை யுரைப்பாய்" என்று வினவினர். இதனால் இராமபிரானும் விபீஷணாழ்வானை இராக்ஷஸ ஜாதியினின்றும் வேறுபட்டவனாகவே கூறினன்.

இத்துணையுங் கூறியவாற்றால், தொண்டக் குலமென்பது ஆத்மாவைப் பற்றி வருவதென்பதும், இது ஏனைய பண்டைக் குலத்தைக் காட்டிலும் சீரியதென்பதும், இதன் சீர்மையைப் பெரியார்களறிந்து வெளியிட்டனர் என்பதும், இக்குலத்தில் அந்வயித்தவர்கள் பண்டைக் குலத்தினியல் பொழிந்து நிற்பார்களென்பதும் பெறப்பட்டன.

ஜராஸந்தவத்தியாயத்திற் சொல்லியபடி அவர் மாறு வேஷத்துடன் ஜராஸந்தனிடம் கபடமாகச்சென்றார் என்பது அசந்தர்ப்பம். இவ்விதமான அசந்தர்ப்பக்கதைகளை யெல்லாம் பிரக்ஷிப்தங்களென்று ஏன் தள்ளிவிடக்கூடாது? அவைகள் பிரக்ஷிப்தங்களென்பதைப் பிரமாணங்களால் நிரூபிப்போம்.—

ஜராஸந்தனது பூர்வ விருத்தாந்தத்தைக் கிருஷ்ணன் யுதிஷ்டிரரிடம் சொன்னாரென்பதைக் குறித்து முன்னமே சொல்லியிருக்கிறோம். ஸ்ரீ கிருஷ்ணன் கம்ஸனைக்கொன்றதிலிருந்து அவரிடம் ஜராஸந்தனுக்கேற்பட்ட விரோதத்தைப் பற்றியு மவ்விடத்திலேயே சொல்லியிருக்கிறோம். அதன் பிறகு மகாபாரதக்காரர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைக்கேட்பீர்களாக.

வைசம்பாயனர்சொன்னார் "பிருகத்ரதவரசன் தனது இரு பார்யைகளுடன் தபோவனத்தில் வெகுநாட்கள் தபசு செய்து, சுவர்க்கத்துக்குச் சென்றான். ஜராஸந்தன் சண்டகௌசிகரிடம் ([illegible]) வரம்பெற்று நிஷ்கண்டகமாய் ராஜ்யத்தையாண்டு வந்தான். இச்சமயத்திற் கிருஷ்ணன் கம்ஸனைக்கொன்றார். கம்ஸனைக் கொன்றதால் ஜராஸந்தனுக்குக் கிருஷ்ணனிடம் கொடிய விரோத மேற்பட்டது.

மகா பலசாலியான ஜராஸந்தன் ஒரு பெரிய கதை ([illegible]) யை யெடுத்து 99 தடவை சுழற்றி யெறிந்தான். மதுரையிலிருந்தவரும், அற்புதச்செயல்களைச் செய்யக்கூடியவருமான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நூறுயோசனை தூரத்துக்கப்பால் கதாயுதம் விழுந்தது. பட்டணத்துச் சனங்க ளவ்வாயுதம் விழுந்ததைப்பற்றிக் கிருஷ்ணனிடந் தெரிவித்தார்கள். அது முதல் மதுரைக்குச் சமீபத்திலுள்ளவவ்விடம் 'கதாவஸாநம்' ([illegible]) என்றபெயரா லழைக்கப்பட்டது. இந்த விஷயமான விருத்தாந்தம் மூலபாரதக் கிரந்தத்திற் காணப்பட்டிருந்தாலும், ஸ்ரீகிருஷ்ணன் மாறுவேஷத்துடன் கிரிவிரஜ்நகரம் சென்றது வாஸ்தவமாயிருக்கும்பக்ஷத்திலும இனிநாம்புராண இதிகாஸங்களிலாங்காங்கு மறைந்துகிடக்கின்றனவாயும் வாஸ்தவங்களாயுமுள்ள சரித்திர தத்துவங்களைத் தூரத்திற்றள்ளிவிட்டு, மற்ற சாஸ்திரங்களைப்பற்றியே

ஆலோசனை செய்யப்புகுவோம். இந்தத்திக்கை நோக்கி யினிப்பார்க்கவேமாட்டோம். ஆனாலந்தவிருத்தாந்தம் மூலபாரதத்திலில்லை.

ஜராஸந்த விருத்தாந்தத்தின் பிற்பகுதியென்று, இந்த வத்தியாயத்தையு முபஸம்ஹாரஞ் செய்வோம். அது மிகவும் சாதாரணமான விருத்தாந்தம். ஜராஸந்தன் பீமனை யுத்தத்துக்கழைத்துவிட்டு, யசஸ்விகளான பிராம்மணர்களால் ஸ்வஸ்தியயனம் செய்யப்பெற்று, த்வந்த்வ யுத்தம் செய்யவேண்டுமென்று க்ஷத்திரிய தர்மங்களுக் கநுஸாரமாய்க் கவசகிரீடங்களைப பரித்தியாகஞ்செய்துவிட்டுச் சண்டையிற் பிரவர்த்தித்தான். அப்பொழுது நகரிலுள்ள பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள், ஸ்திரீகள், வயதுசென்றவர்கள் எல்லோரும் யுத்தத்தைப் பார்ப்பதற்காக வெழுந்துவந்தார்கள். யுத்தபூமி முழுவதும ஜனங்களால் நிறைந்துவிட்டது. நாலாபக்கங்களிலும் கோரமான யுத்தம்நடந்தது. (இது உண்மையானால் இடைவிட்டு இடைவிட்டு யுத்தம் நடந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.) நான்கு திக்குகளிலும் யுத்தம் செய்து களைத்துப்போன ஜராஸந்தனையும், களைப்படையாமல் யுத்தம்செய்கிற பீமஸேனனையும் பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் சொன்னார்—"ஹே! குந்தி புத்திரனே! களைப்படைந்த சத்துருவைத் தொந்திரவுசெய்வது நியாயமில்லை. அவன் அதிகக் கஷ்டத்தையடைந் திறப்பான்போலிருக்கிறது. ஆதலால் நீ யவனை ஹிம்ஸிக்கக்கூடாது. ஹே! பாரதர்ஷபனே! நீ யவனுடன் கைச்சண்டை செய்" என்று. (தர்ம யுத்தத்தால் சத்துருவைக் கொல்லுதல் "ஹிம்ஸை" யாகாது) ஆனால் பீமன் ஜராஸந்தனை ஹிமஸைசெய்தே கொன்றான், ஸ்ரீ கிருஷ்ணனிடம்போல் பீமனிடம் தர்மஞானமில்லை,

அப்பொழுது கிருஷ்ணார்ஜுனர்களும் பீமனும் சிறைபிலடைபட்ட வரசர்களை விடுவித்தார்கள். இதுவே ஜராஸந்த வதத்தின் உத்தேசம். அவ்வரசர்களை விடுவித்துவிட்டு வேறுகாரியமொன்றும செய்யாமல் அவர்கள் தங்கள் தங்கள் நகரத்துக்குச் சென்றார்கள். அவர்கள் ஜராஸந்தனது ராஜ்யத்தை யபஹரிக்க (annexation) விரும்பவில்லை. தகப்பனது குற்றத்துக்காகப் புத்திரனுடைய ராஜ்யத்தை யபஹரிக்கவில்லை. அவர்கள் ஜராஸந்தனைத் துலைத்தபிறகு

அவன் புதல்வனை ஸகதேவனுக்கு ராஜ்யபட்டாபிஷேகம் செய்வித்தார்கள். சிறையிலிருந்து விடுபட்ட வரசர்களோ, ஊழியர்களாக தங்களுக்கேதாவது வேலையி லுத்திரவிடவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். ஸகதேவன் காணிக்கை கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்டார்கள். மறுபடியும் அவ்வரசர்கள் ஏதாவது உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஸ்ரீ கிருஷ்ண னவர்களை நோக்கி "யுதிஷ்டிரவரசர் ராஜஸூயயாகம் செய்யவிரும்புகிறார். ஸம்ராஜாவாக வேண்டுமென்று விரும்புகிற அந்தத் தர்மாத்மாவுக்குத் தாங்களெல்லோரு முதவிசெய்யுங்கள்" என்று சொன்னார்.

யுதிஷ்டிரரை மத்தியில்வைத்துத் தர்ம ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்பதே ஸ்ரீகிருஷ்ணனின் ஜீவனோத்தேசம். அடிக்கடி யதையே யவர் நடத்திவந்தார். ஜராஸந்தவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணசரித்திர மகிமை விளங்குகிறது. ஆனால் பிறருடைய கெட்டபுத்தியால் அம்மகிமை பொதிந்துவிட்டது. இதன் பிறகு சிசுபாலன்வதை. அவ்விருத்தாந்தத்திலும் பொய்கள் காணப்படுகின்றன.

9வது அதிகாரம்

அர்க்கியாபிஹரணம்.

யுதிஷ்டிரரின் ராஜஸூயயாகம் தொடங்கப்பெற்றது. பலதிசைகளிலிருந்தும், அரசர்கள், ரிஷிகள், மற்றவர்களும் திரள் திரளாகக் குவிய ராஜதானி நிறைந்துவிட்டது. இந்தப்பெரிய காரியம் நன்றாக நிறைவேறுவதற்காகப் பாண்டவர்கள், தங்களைச் சார்ந்தவர்களை விசேஷவேலைகளில் நியமித்தார்கள். துச்சாதனனைப் போஜனத்திரவியங்களைப் பரீக்ஷித்தலிலும், ஸஞ்சயனை வந்தவர்களை யுபசரித்தலிலும், கிருபாசாரியாரை இரத்னங்களைக் காத்தலிலும், தக்ஷிணை கொடுத்தலிலும், துரியோதனனை காணிக்கை வாங்குதலிலும், இவ்விதமாகவே யெல்லோர்களையும் நியமித்திருந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனையும் மற்றவர்களுடன் ஒரு காரியத்தில் நியமித்ததாக எழுதியிருக்கிறது. அவருடைய வேலை பிராமணர்களின் பாதப்ரக்ஷாளனம். (கால் கழுவுதல்) இவ்விருத்தாந்தத்தின் மர்மம் நன்றாய் ஆராயத்தக்கது.

இந்த விருத்தாந்தத்துக்கு அநேக விதங்கள் வியாக்கியானங்கள் இருக்கக்கூடும். பிராமணர்களால் ஏற்றப்பட்டு இதுவரை பிரசாரத்திலிருக்கிற வியாக்கியானத்தில், ஸ்ரீ கிருஷ்ணன் பிராமணர்களின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகவே, இவ்வேலையில் தானாகவே நியமித்துக் கொண்டாரென்று கண்டிருக்கிறது. பிராமணர்களுக்கு யோக்கியதைக்குத் தக்கவாறு மரியாதை செய்தல் நியாயமே. மூலபாகத்திலுள்ள வனபர்வதத்தை நாம் பரிசீலனை செய்யும்பக்ஷத்தில், அவர் பாண்டவர்களின் ஆசிரமத்துக்கு வந்து அவர்களைத் தொந்திரவு செய்பவர்களான போலிப்பிராமணர்களை அவர் அவ்விடத்திலிருந்து வெளியேற்றியதையும் நாம் காண்கிறோம். அவர் பெரிய மாயாவி. கீதையிற் சொல்லப்பட்ட தர்மமே ஸ்ரீ கிருஷ்ணனுடைய தர்மம்.

> வித்யாவிநய ஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி ।
> ஶுநி சைவ ஶ்வபாகே ச பண்டிதா: ஸமதர்ஶிந: ॥

வித்தை, வினயம் நிறைந்த பிராமணர்களிடமும், பசுவிடமும், யானையிடமும், நாயினிடமும், சண்டாளனிடமும் சமபாவனை யிருக்க வேண்டுமென்பதும் ஸ்ரீ கிருஷ்ணனின் கொள்கை. அவர் ஆதர்ச புருஷராயிருப்பதால், வினயத்தை எல்லோருக்கும் சிக்ஷிப்பதற்காகவே இந்த வேலையை ஒப்புக்கொண்டாரென்று சிற்சிலர் சொல்லக்கூடும். எக்காலத்தில் எல்லோருக்கும் பிராமணர்களிடம் பக்தி மிகுதியாயிருந்ததோ அப்பொழுது கெட்டவழக்கங்களை விலக்குவதற்காக இவ்விதமாய் அலௌகிக பிராமண பக்தியைக் காட்டியிருக்கிறார் என்று பிறர் சொல்லக்கூடும்.

சிசுபாலவத அத்தியாயத்திலும், மற்ற அத்தியாயங்களிலும், அவர் க்ஷத்திரியர்களுக்கும் வீரர்களுக்கும் உசிதமான மற்றக்காரியங்களையும்கவனித்துவந்தார் என்று நாம் காண்கிறோம். மகாபாஹுவான வாஸுதேவர் தனுசு, சக்கிரம், 'கதை' இவைகளைத் தரித்துக்கொண்டு கடைசிவரை யஜ்ஞத்தை ரக்ஷித்துவந்தாரென்று நாம் அங்கே காண்கிறோம். நாம்இந்தக்கண்டத்தையும் அத்தியாயத்தையும்நன்ருய்ப் பரிசீலனம செய்யவில்லை. கிருஷ்ண சரித்திர சம்பந்தமான பாரத

விருத்தாந்தங்கள் அநேகவிடங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசப் படுகின்றன. அதில் அநேக எழுத்தாளரின் கைபட்டதால் இவ்வித மான மாறுபாடுகள் காணப்படுகின்றன. ராஜஸூய யாகத்தின் மகா சபையில் சிசுபாலனென்ற பராக்கிரமசாலியான மகாராஜன் கிருஷ்ண னால் கொல்லப்பட்டான். பாண்டவர்களுடனிருந்ததால் ஸ்ரீ கிருஷ்ண னுக்கு ஆயுதம் தரித்துத்துக்கொள்ள வேண்டியிருந்தது. காண்டவ வனதாகத்தில் நிகழ்ந்த யுத்தம் மூலபாரதத்திற் காணப்படவில்லை. சிசுபாலவதாத்தியாயத்தில் ஒரு பெரிய ஐதிஹாஸிகதத்வம் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

ஜராஸந்தவதாத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் ஈசுவரனென்பதை மறைவாகக் காண்கிறோம். இந்தச் சிசுபாலவதாத்தியாயத்தில் கிருஷ்ணனைச் சார்ந்த ஜனங்கள் அவருக்கு ஈசுவரத்தன்மையுண் டெனச் சொல்லியிருக்கிறார்கள். வம்சத் தலைவரான பீஷ்மரே இவ் வபிப்ராயத்தைப் பரவச்செய்தார்.

ஸ்ரீ கிருஷ்ணன் தன்னை யீசுவரனென்று எங்கேயாவது ஒத்துக் கொண்டிருக்கிறாரா வென்ற கேள்விக்கு நாம் பதில்சொல்லவேண்டுவ தில்லை. இதைப்படிப்போர்க்குப் பின்னாலது விசதமாகும். சிசுபால வதாத்தியாயம் மூலபாரதத்தைச்சேர்ந்ததென்று நாம் ஒத்துக்கொள் ளும்பக்ஷத்தில், அவ்வத்தியாயத்திலேயே கிருஷ்ணன் ஈசுவரனென் பதை அங்கீகரித்துக்கொண்டார் என்பது விசதமாகும். அவரீசுவர னென்றும் இல்லையென்றும் இரு கக்ஷிகள் இருந்தன. பிந்திய கக்ஷிக் குத் தலைவன் சிசுபாலன். பீஷ்மர் முதலியவர்கள், ஸ்ரீ கிருஷ்ணனை முதன்மை ஸ்தானத்தில் வைக்கவேண்டுமென்றுப் பிரயத்தனம் செய் தார்கள். சிசுபாலன் அந்தப் பிரயத்தனத்தை யெதிர்த்தான். அதி லிருந்து பெரிய விவாதம் ஏற்பட்டது. அதனால் கிருஷ்ணன் சிசு பாலனைக் கொன்றார். கலகமெல்லாமொழிந்தது. யக்ஞம் நிர்விக்ன மாய் நிறைவேறியது.

அநுக்ரமணிகாத்தியாயத்திலும், பர்வஸங்கிரகாத்தியாயத் திலும், இந்தக்கதையைப்பற்றிக் குறித்திருக்கிறது. மேலும் வசன நடையைக் கவனிக்கும்போது சிசுபால வதாத்தியாயம் மூலபாரதத்

தைச் சார்ந்ததென்று சொல்லக்கூடும். இவ்வத்தியாயத்தை அமௌலிகமென்றும் தள்ளிவிடவும் கூடாது. அதைப் பரிசீலனம் செய்தால் அதில் இரண்டு எழுத்தாளர்களின் கைபட்டிருக்கிறதென்று தெரியவரும்.

இப்பொழுது சிசுபாலனின் விருத்தாந்தத்தை விஸ்தரித்துக் கூறுவோம். ஒரு பெரிய மனிதனது கிருகத்தில் சபை நடக்குமானால் அதில் பிரதானமான மனிதனுக்குச் சந்தனம் புஷ்பம் கொடுக்கிற தென்ற வழக்கம் தொன்றுதொட்டு நம்தேசத்திலனுஷ்டானத்தி லிருந்து வருகிறது. இதைச் 'சந்தனம் புஷ்பம் கொடுத்தல்' எனச் சொல்வார்கள். அம்மனிதனது குணத்தைக்குறித்து மரியாதை செய்யப்படுகிறதில்லை. அவனது வம்ச மரியாதையைக் குறித்தே செய்கிறார்கள். நல்ல குலத்திற் பிறந்தவர்களில் முதன்மையான புருஷனுக்கே மரியாதை செய்யப்படுகிறது. ஆனால் ஸ்ரீ கிருஷ்ணனது காலத்திலோ, சபையில் வந்திருக்கிறவர்களுக்குள் ஸர்வப்பிரதான மான புருஷனுக்கே மரியாதை செய்வது வழக்கம். வம்ச மரியாதைக் காக மரியாதை கொடுக்கப்படவில்லை. மனிதனது சொந்த யோக்கிய தைக்காகவே கொடுக்கப்பட்டது.

யுதிஷ்டிரரது சபையில் ஒருவருக்கு மரியாதை செய்யவேண்டும். சபையிலுள்ளோர்களுக்குள் எவன் சிரேஷ்டன்? ஸ்ரீ கிருஷ்ணனே ஸர்வசிரேஷ்டர் என்றும் அவருக்கே அர்க்கியப்பிரதானம் செய்ய வேண்டுமெனவும் பீஷ்மர் சொன்னார். அவர் கிருஷ்ணனை யீசுவர னெனக்கருதி "ஸர்வசிரேஷ்டர்" எனச் சொன்னார் என்பதற்கு யாதொரு குறிப்பும் அங்கே காணப்படவில்லை. தேஜஸ், பலம், பராக்கிரமம் இவைகளில் ஸ்ரீ கிருஷ்ணனே சிரேஷ்டன என்று பீஷ்மருடைய அபிப்பிராயம், இதிலிருந்து பீஷ்மர் ஸ்ரீகிருஷ்ணனது மனுஷ்ய சரித்திரத்தையே கவனித்தாரென்பது தெரியவரும்.

ஸ்ரீ கிருஷ்ணன் அர்க்கியத்தைப் பெற்றுக்கொண்டார். இதைச் சிசுபாலனால் சகிக்கமுடியவில்லை. ஒரே காலததில், பீஷ்மர், கிருஷ்ணன், பாண்டவர்கள் எல்லோரையும் எவ்விதமாகச் சிசுபாலன் வைதானோ, அது, மேல்நாட்டில் (Parliament) பார்லிமெண்டில்

செய்யப்படுகிற உபந்யாஸங்களுக்குச் சமானமானதா யிருந்தது.
அவன் உயர்ந்தகுரலுடன் கடினமாயும், தூஷணையாயும் பேசவாரம்
பித்தான். கிருஷ்ணன் அரசனில்லை. இத்தனைபேர்கள் அரசர்க
ளிருக்கும்போது அவனுக்கு ஏன் அர்க்கியம் கொடுக்கவேண்டும்?
அவன் வயதில் பெரியோனென்று அர்க்கியம் கொடுக்கவேண்டு
மானால், பெரியோரான வஸுதேவருக்கு ஏன் அர்க்கியம் கொடுக்கப்
படவில்லை? அவன் பாண்டவர்களைச் சார்ந்தவனென்றும், அவர்
களுக்கு ஹிதமசெய்வானென்றும் அவனுக்குப் பூஜை செய்யப்பட்
டதோ? மாமனான துருபதவரசனை விட்டுவிட்டு அவனுக்குப்
பூஜையேன்? கிருஷ்ணன் ஆசார்யனென மனதிற்கொண்டீர்களோ?
துரோணாசாரியாரிருக்கும் போது அவனுக்கு அர்ச்சனை யெதற்காக?
ருத்விக்கெனக் கருதியவனுக்கு அர்க்கியமா? கிருஷ்ணன் எம்மாத்
திரம்? இதுமுதலான அநேகவிதமாக தூஷித்தான்.

சிசுபாலன் இவ்விதமாகத் திட்டித்திட்டி, சினங்கொண்டு,
வெட்கத்தைத்துறந்து யோசனையை யிழந்து, பாண்டவர்களைவிட்டு
கிருஷ்ணனைத் திட்டவாரம்பித்தான். லக்ஷணமற்றவன் என்றும்
துராத்மா வென்றும் மற்ற வசைச்சொற்களாலும் தூஷிக்கத்தொடங்
கினான். முடிவில் அவரை நெய்யைத் திருடியுண்ட சுவானமே (நாய்)
யென்றும், விவாகம செய்துகொண்ட நபும்ஸகன் என்றும் இன்னும்
வேறு வேறு வசைச்சொற்களாலும் நிந்திக்கத் தொடங்கினான்.
அவனால் தொடுக்கப்பட்ட வசைச்சொல் வரிசைகளிற் சிலதைமாத்
திரம் இங்கே குறித்திருக்கிறோம். இவைகளைக்கேட்டுப் பொறுமைக்
கிருப்பிடமாயும், மகாயோகியாயும் ஆதர்சபுருஷராயுமுள்ள ஸ்ரீகிருஷ்
ணன் யாதொரு பதிலும் சொல்லவில்லை. சிசுபாலனை ஒரேயடியாய்
அடித்துக்கொல்வதற்குக் கிருஷ்ணனிடம் வல்லமையிருந்ததென்பது
இதைப் படிப்போர்களுக்குத் தெரியும். அவனால் திட்டப்பட்டமாதிரி
ஸ்ரீ கிருஷ்ணன வேறிடததில் தூஷிக்கப்பட்டிருப்பாரென்று நாம்
நினைக்கவில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் சிசுபாலனை நோக்கி "சிசுபாலனே!
பொறுமையென்பது சிறந்ததர்மம். உன்னைநாம்மன்னித்தோம் என்று
மெதுவான குரலில் அவர் சிசுபாலனிடம் சொன்னார். யுதிஷ்டிரரோ
வென்றால், அவ்விடத்தில் வந்திருக்கிற வரசர்கள் கோபமடைவதைக்

கண்டு அவர்களையும் சாந்தப்படுத்தினர். யக்ஞசாலையில் தீக்ஷையுடனிருப்போர் இவ்விதமாகவே யிருத்தல்வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணனைத்திட்டினவனை யுதிஷ்டிரர் நல்ல வார்த்தைகளாற் சமாதானம் செய்தார். பெரியோரான பீஷ்மர் இரும்பாலாக்கப்பட்டவர் போலும். அவருக்கு இது ஒன்றும் பிடிக்கவில்லை. ஸ்ரீ கிருஷ்ணனின் அர்ச்சனை யெவனுக்கு உசிதமாகத்தோன்றவில்லையோ அவனைச் சமாதானம் செய்தல் உசிதமில்லையெனப் பீஷ்மர் கர்ஜித்தார். ஸ்ரீகிருஷ்ணனை ஸ்தோத்திரம் செய்யவாரம்பித்தார். அந்த ஸ்தோத்திரத்தின் ஸாராம்சத்தை இங்கு எழுதுகிறோம். அதிற் பொதிந்துகிடக்கிற ரகஸ்யத்தைப்பற்றிப் பிறகு சொல்வோம். ஸ்தோத்திரத்தின் ஸாரம் இதுவே.

"மனுஷ்யர்களுக்குள் நல்ல குணங்கள் எவையிருக்கின்றனவோ, விசேஷமாக க்ஷத்திரியர்களுக்குள் உத்தமகுணங்கள் எவை காணப் பெறுகின்றனவோ, அவ்வெல்லாக் குணங்களும் ஸ்ரீ கிருஷ்ணனிடம் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணன் ஸர்வ சிரேஷ்டர்; அக்ர பூஜைக்குத் தகுதியானவர். ஸ்ரீ கிருஷ்ணன் ஜகதீசுவரரே. எல்லோராலும் அர்ச்சிக்கத்தகுந்தவர்.

மேலும் பீஷ்மர் "ஸ்ரீ கிருஷ்ணனால் ஜயிக்கக்கூடாதவரசன் இச்சபையில் ஒருவனுமில்லை" யென்றும் சொன்னர்.

இதுவரை ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றிப் பீஷ்மர் மனிதராகவே வர்ணித்தார். பிறகு ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றித் தேவனென்ற சொற்கள் பயின்றுள்ளன. அவை " ஸ்ரீ கிருஷ்ணன் நம்மால்மட்டுமர்ச்சிக்கத் தகுந்தவரென்பதில்லை. அவர் மூவுலகத்தாராலும் பூஜிக்கத்தகுந்தவர். யுத்தத்திலவர் கணக்கிலடங்காத க்ஷத்திரியர்களை ஜயிக்கவல்லவர். எல்லாப்பிர்மாண்டங்களும் அவரிடத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கின்றன," என்பன. மறுபடியும் "கிருஷ்ணன் பிறந்ததுமுதல் என்ன கார்யங்களைச் செய்தாரோ அவைகளை ஜனங்கள் அவருடைய சந்நிதானத்திலே கீர்த்தனம் செய்கிறார்கள். சிறு குழந்தையாயிருக்கும்போதேயவரை நாம் பரீக்ஷை செய்திருக்கிறோம். அவருடைய பௌரஷம் வீர்யம்,கீர்த்தி, முதலியவைகளை நாம் அறிந்திருக்கிறோம்." என்று பீஷ்மர் உரைத்தனர்.

(பிறகு ஸ்ரீ கிருஷ்ணன் ஈசுவரனென்ற வார்த்தை)"அவரே சர்வ பூதங்களுக்கும் சுகத்தை யளிப்பவர்; எல்லா ஜகத்தாலு மர்ச்சிக்கப் பெறுகிற ஸ்ரீ அச்சுதருக்கே பூஜை செய்யுங்கள்;"

(மறுபடியுமவர் மனிதனென்று பரிஷ்காரமாக வுரைத்தல்)

"கிருஷ்ணனைப் பூஜை செய்ய இரண்டு காரணங்கள் இருக்கின்றன. அவர் வேதவேதாந்தங்களிற் கரைகண்டவர்; மிகவும் பலசாலி; அவரைப்போல் வேதவேதாந்தங்கள் தெரிந்தவனும் பலசாலியாயு முள்ள வேறு மனிதனை உலகத்தில் காண்பதரிது. கொடை, தாக்ஷிண்யம், வேதஜ்ஞானம், லஜ்ஜை, கீர்த்தி, புத்தி, விநயம், பெருமை, தைரியம், ஸந்தோஷம் முதலிய ஸர்வகுணங்களும் அவரிடம் எப்பொழுதும் விளங்குகின்றன. அவரே ஸர்வகுணங்களும் நிறைந்த ஆசாரியன், தகப்பன், பந்து, பூஜிக்கவர்ஹர்; அவர் விஷயத்தில் நீங்களெல்லோரும் பொறுமை காட்டவேண்டும். அவரே ரித்விக், குரு ஸம்பந்தி, ஸ்நாதகர், பிரியபாத்திரர்; ஆகையால் அவர் எல்லோராலும் அர்ச்சிக்கத்தகுந்தவ"ரென்று பீஷ்மரின் வார்த்தை.

மறுபடியும் ஸ்ரீ கிருஷ்ணனீசுவரரென்ற விவகாரம். "ஸ்ரீ கிருஷ்ணனே சராசரங்க ளெல்லாவற்றிற்கும், சிருஷ்டி, பரிபாலனம், பிரளயம் இவைகளைச் செய்பவர். அவரே அவ்யக்தமென்ற மூலப் பிரகிருதி, ஸநாதனர். கர்த்தா, ஸர்வ பூதங்களுக்கும் ஈசுவரர், மிகவும் பூஜிக்கத்தகுந்தவர் என்பதில் சந்தேகமென்ன?" என்று பீஷ்மர் சொன்னார். இவ்விதமாகப் பீஷ்மர் கிருஷ்ணனைக் குறித்து மறுபடியும் மறுபடியும் புகழ்ந்தார்.

பீஷ்மருடைய வார்த்தைகளிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜிப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளனவென்று தெரியவரும். (1) அவர் சர்வச்சிரேஷ்டர். (2) அவருக்குச் சமமாக வேதவேதாங்கங்களைக் கற்றறிந்தவர் யாருமில்லை.

ஸ்ரீ கிருஷ்ணனின் பராக்கிரமத்தைப்பற்றி இந்தக் கிரந்தங்களில் அநேக இடங்களில் சொல்லியிருக்கிறது. கிருஷ்ணனிடம் ஒப்பற்ற

ஞானமிருந்ததென்பற்குக் கீதையே சாக்ஷியாகும். நாமெதைப் பகவத் கீதை யென்று பாராயணம் செய்துவருகிறோமோ அது கிருஷ்ணனால் நேரில் இயற்றப்படவில்லை. அது வியாஸராலியற்றப்பட்டதென்பது பிரஸித்தம். வையாஸிகி ஸம்ஹிதையென்று அதைச்சொல்லுவார்கள் அதை யியற்றியவர் வியாஸராயிருந்தாலும், வேறு எவராயிருந்தாலும் அவர் ஸ்ரீகிருஷ்ணன் சொல்வதைக் குறித்துவைத்துக்கொண்டு கிரந்தத்தை யெழுதினாரென்பதில்லை. ஆனால் கீதையென்பது ஸ்ரீ கிருஷ்ணனின், தர்ம தத்துவங்களை யெல்லாம் ஒருங்குசேர்த்துத் தொகுக்கப்பட்ட கிரந்தமே யென்பது நமது அபிப்பிராயம். அவருடைய தர்மத்தையவலம்பித்த ஒரு மகானால், இவ்வுருவமாகத் தொகுக்கப் பட்டிருக்கிறது. அவர் ஒப்பற்றவேதவித்." மகாபண்டிதர். கீதையிற்சொல்லப்பட்ட தர்மங்கள், ஒப்பற்ற 'வேதஜ்ஞ' ராலேயே யியற்றப்பட்டதென்பதிற் சந்தேகமில்லை.

இவ்விதமாக எவர் பராக்கிரமத்திலும், பாண்டித்தியத்திலும், வீர்யத்திலும், படிப்பிலும், கர்மத்திலும், ஞானத்திலும், நீதியிலும், தர்மத்திலும், தயையிலும், பொறுமையிலும் ஒரேவிதமாகச் சர்வ சிரேஷ்டரோ அவரே ஆதர்சபுருஷர்.

---

10 வது அத்தியாயம்

சிசுபாலவதம்.

பீஷ்மர் சொல்லவேண்டுவதைச் சொல்லிமுடித்துச் சிசுபாலனை மிகவும் இகழ்ந்து சொன்னார். "ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் செய்யும் பூஜையானது சிசுபாலனுக்கு அஸஹ்யமாயிருக்கும் பக்ஷத்தில் அவன் இஷ்டப்படி செய்யலாம்; அதாவது அவன் அவ்விடத்தைவிட்டு விலகலாம்" என்று பீஷ்மர் கோபத்துடன் உரைத்தார்.

கிருஷ்ணன் அர்ச்சிக்கப் பெற்றதைப்பார்த்து ஸுநீதனென்ற ஓர் வீரன் கோபத்தால் உடல் நடுங்கி, கண்கள் சிவந்து, அரசர்களைப் பார்த்துச் சொன்னான். "நாம் முன்பு ஸேனாதிபதியாக விருந்தோம்; இப்பொழுது பாண்டவகுலத்தை வேரோடுகளைவதற்காக இன்

றைக்கே யுத்தசமுத்திரத்தில்இறங்குவோம்; என்றான்.சேதியாசனை சிசுபாலன் உற்சாகமுள்ளவனாக ஆகி, யக்ஞத்தைக் கெடுப்பதற்காக அரசர்களுடன் ஆலோசனை செய்தான்.

"யுதிஷ்டிரரின் யாகமும், கிருஷ்ணனது பூஜையும் நாமெவ்விதம் செய்தால் நிறைவேறாவோ அவ்விதமே காரியத்தை நடத்தவேண்டும்" என்று சுநீதன், அரசர்களிடம் சொன்னான். தங்களுக்கு அக்ர மரியாதை கிடைக்கவில்லையென்று அரசர்களும் கோபமடைந்து கூடிக் கூடி யாலோசனை செய்தார்கள். அதைப்பார்த்துக் கிருஷ்ணன் அவர் களெல்லோரும் யுத்தத்துக்கு ஆயத்தமாயிருக்கிறார்களெனத் தெரிந்து கொண்டார். யுதிஷ்டிரர் கோபத்துடன் கடல்போல் திரண்டிருக்கிற அரசர்களைப்பார்த்தும் பீஷ்மப் பெரியாரைப் பார்த்தும் "தாத்தாவே அரசக் கூட்டமான சமுத்திரம் கலக்கமடைந்து எழுந்துவிட்டது. நானிப்போது என்னசெய்யவேண்டும்? உத்திரவிடுவீர்களாக" என்று கேட்டுக்கொண்டார்.

சிசுபாலன் வதத்திற்கு இதுவே உண்மையானகாரணம். அவன் கொல்லப்படாதிருந்தால், மற்றவரசர்களுடன் கூடிக்கொண்டு யாகத் தைக் கெடுத்தேயிருப்பான்.

சிசுபாலன் மறுபடியும் பீஷ்மரையும் கிருஷ்ணனையும் வைதான், குழந்தைகள்கூட வருத்தத்தை யடையும்படி கிருஷ்ணனைத் துராத்மா வென்றும், இடையனென்றும் மற்றவிதமாயும் திட்டினான். மகா யோகியான ஸ்ரீ கிருஷ்ணன் அவனை க்ஷமித்துப் பேசாமல் மௌனமா யிருந்தார். ஸ்ரீ கிருஷ்ணன் வல்லமையால் எவ்விதமாக ஆதர்சமோ அவ்விதமே பொறுமையிலும் ஆதர்சம். பீஷ்மரும் முதலில் ஒன்றும் சொல்லவில்லை. பீமன் கோபமடைந்து சிசுபாலனைப் பிடிப்பதற்காக எழுந்தான். பீஷ்மர் அவனைத் தடுத்துச் சிசுபாலனின் பூர்வ விருத் தாந்தத்தை விவரிக்கத்தொடங்கினார்.

"சிசுபாலன் பிறக்கும்போது அவனுக்கு மூன்று கண்களும் நான்கு கைகளுமிருந்தன. அவன் கழுதையைப்போல் கத்தினான். இவ்வித அவலக்ஷணங்களமைந்த புத்திரனைத் தியாகம்செய்வதே நல

மென்று அவனுடைய தாய் தந்தையர்கள் நினைத்தார்கள். இச்சமயம் "நல்லது, குழந்தையை யெறிந்துவிட வேண்டாம். சிரமப்பட்டா வது குழந்தையைக் காப்பாற்றுங்கள் யமன்கூட இதற்கு ஒன்றும் செய்யமுடியாது. இப்பொழுது இதைக் கொன்றாலும் மறுபடியும் அது கிளம்பிவிடும். என்று தேவவாணி சொல்லிற்று. தாய் தந்தை யர்கள் "ஓ தேவவாணியே! இதை யெவன் கொல்வான். பெயரைச் சொல்லக்கூடாதா?" என்று கேட்டார்கள். தேவவாணி அக்காலத்திலேயே கிருஷ்ணனே சிசுபாலனைக் கொல்வான் என்று சொல்லியிருந்தால், யுதிஷ்டிரரது ராஜ ஸூய யாகத்தில் அரசர்களின் கலகம் குறைவுபட்டிருக்கும். சிசுபாலன் கிருஷ் ணனை யெதிர்த்திருக்கமாட்டான். அப்படித் தேவவாணி சொல்லியிருக்கும்பக்ஷத்தில், இந்தக் கதைக்கு ரஸம் குறைவுபடும். (Plot interest) ருசி இருக்காது. "இக்குழந்தையின் நான்கு கை கள் எவனைக் கண்டவுடன் இரண்டு கைகளாக ஆகுமோ, கண்கள் சரியானவையாக மாறுமோ, அவனே இந்தப் பையனைக் கொல்வான்" என்று தேவவாணி சொல்லிற்று. சிசுபாலனது தகப்பன் குழந் தையை ஊர் ஊராய்ச் சுமந்துசென்று அதை எல்லோரிடமும் காண் பித்தான். ஒருவனுடைய முன்னிலையிலும் குழந்தையின் கண்களும், கைகளும் ஒழுங்காக ஆகவில்லை. (ஸ்ரீகிருஷ்ணனிடம் மட்டும் குழந் தையைக் காட்டவில்லை. அவரைச் சிறுவனென நினைத்தான் போலும்.) சிசுபாலன் கிருஷ்ணனுக்குச் சமானமான வயதுள்ளவன். ஏனெனில் இருவர்களும் ருக்மிணியை விவாகம்செய்யப் பிரயத்தனப்பட்டார்கள். தேவவாணியும் அவ்விதமாகவே (ஸூசனா) சூசனை செய்தது. கிருஷ்ணன் துவாரகையிலிருந்து சேதி தேசத்துக்குப்போய் சிசு பாலனுக்குக் காட்சிகொடுத்தார். அப்பொழுதே அவனது இரண்டு கைகளும், ஒரு கண்ணும் மறைந்துவிட்டன.

சிசுபாலனின் தாயார் ஸ்ரீகிருஷ்ணனுக்கு முறைமையில் அத்தை. ஸ்ரீகிருஷ்ணனைப் பலவந்தப்படுத்தி அவள் பிடித்துக் கொண்டாள். சிசுபாலனைக் கொல்லக்கூடாதெனக் கேட்டுக்கொண் டாள். சிசுபாலனது வயதுக்குத்தகுந்தவையான நூறு குற்றங்களை யவர் பொறுத்துக்கொள்வதாக வுறுதிசெய்தார்.

ஸ்ரீ கிருஷ்ணனை யாதர்சபுருஷரென்றும், மனிதத்தன்மையின் விகாஸத்துக்காகவே யவதரித்தாரென்றும் நாம் கொள்வோமானால், அவருடைய செய்கைகளெல்லாம் விசதமாக நமக்குத்தெரியவரும். கிருஷ்ண சரித்திர ரூபமானவிரத்தினப் பெட்டியைத் திறப்பதற்கு அவருடைய ஆதர்சபுருஷத்தன்மையே திறவுகோலாகும்.

சிசுபாலனது வசைச் சொற்களைக் கிருஷ்ணன் பொறுத்திருந்தா ரென்ப தவருக்குப் பெருமையல்ல. அவனிதற்கு முன்பே யவருக் கநேகக் கெடுதல்களைச் செய்திருக்கிறான். ஸ்ரீ கிருஷ்ணன் எப்போது "பிராக்ஜோதிஷ நகரம் (ஜாராசந்தனுடைய நகரம்) சென்றிருந்தாரோ, அந்தச்சமயம்பார்த்துத் துவாரகையை யெரிப்பதற்காகச் சிசுபால னோடினான். ஓர் சமயம் போஜராஜன், ரைவதக பர்வதத்தில் விளை யாடுவதற்காகச் சென்றிருந்தார். அதே சமயத்திற் சிசுபாலன் துவாரகைக்கு வந்து அநேக யாதவர்களை வதம் செய்தும் பந்தனம் செய்தும், வஸுதேவரது அசுவமேதக் குதிரையையும் களவாடிவிட் டான். இது ஒன்றே க்ஷத்திரியர்களுக்குள் பெரிய குற்றம். இக்குற் றங்களையெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணன் பொறுத்தார். அவ்விதமாகவே ஜாரஸந்தனது குற்றங்களையும் பொறுத்தார். எப்பொழுது அவன் சிறையில் வைத்திருந்தவரசர்களைப் பசுபதிக்குப்பலியிட நினைத் தானோ அப்பொழுதுதான் அவன்மீது விரோதத்தைக்காட்டினார். ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சிசுபாலன் விரோதம் செய்தபொழுதும் அவர் அவனுக்கு யாதொரு கெடுதியும் செய்யவில்லை. எப்பொழுதவன் பாண்டவர்களின் யக்ஞத்தைக் கெடுக்கவும் தர்மராஜ்யஸ்தாபனத் தைத் தடுக்கவும் தலைப்பட்டானோ அப்பொழுததான் ஸ்ரீ கிருஷ்ண னவனைவதைத்தார். க்ஷமையில் ஆதர்சபுருஷனான ஸ்ரீ கிருஷ்ணன் தனக்கு எவன் அபராதம் செய்தாலும் அதைப் பொறுத்துவந்தார். அபராதிகளைத் தண்டித்தவிலும் ஆதர்சமான கிருஷ்ணன் ஜனக் கூட்டத்துக்குக் கெடுதி செய்தவனை மட்டுமே தண்டித்திருக்கிறார்.

ஸ்ரீ கிருஷ்ணனது பொறுமையைப்பற்றிப் பேசும்போது கர்ணன் துரியோதனன் முதலானவர்களிடம் அவர் எவ்விதம் பொறு மையைக் காட்டினாரென்பதைச் சொல்லாமலிருப்பதற்கில்லை. அது உத்யோக பர்வத்தின் கதையாயிருந்தாலுமதை யிவ்விடத்திலேயே

பிரஸ்தாபித்தல் நலம். கர்ணதுர்யோதனர்களவரைக் கட்டிவிடுவதற்கு முயற்சி செய்தபொழுதவர்களேயவர் க்ஷமித்தார். பக்தக்களென்ற முறைமையிலவர்களுடன் சம்பாஷணையும் செய்தார். மகாபாரத யுத்தத்திலவர் ஆயுதங்களைக் கையிலெடுக்கவில்லை.

சிசுபாலன் ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் கெடுதிசெய்தபோதவர் ஸபையிலிருந்தவர்களை நோக்கி அவனால் முன் செய்யப்பட்ட குற்றங்களையெல்லா மொருங்குசேர்த்து வெளியிட்டார். அவர் சொன்னதாவது:—"இதுவரை நாம் பொறுத்திருந்தோம், இனி க்ஷமை செய்வதிற் ப்ரயோசனமில்லை" என்பதாம்.

இதுவரையவர் அத்தையின் வார்த்தைக்கிணங்கிப் பொறுத்து வந்தார். 'பையனோ துஷ்டன்; கிருஷ்ணத்வேஷி; ஸ்ரீ கிருஷ்ணனோ மகா பலசாலி' என்று மனதிற்கருதியே அண்ணனது புத்திரனை யவவிவ்விதம் கேட்டுக்கொண்டாள் என்பதும் யுக்தம்தான். ஸ்ரீ கிருஷ்ணன் தானாகவே சிசுபாலனை க்ஷமிக்காவிட்டாலும், அத்தையின் வார்த்தைக்காக அவர் அவனுக்கொருகெடுதியும் செய்யவில்லையென்பதும் ஸம்பாவிதம்தான்.

அதன்பிறகே யியற்கைக்கு விரோதமான ஒரு விஷயம் உளம் பிற்று. சக்கிராயுதத்தை ஸ்மரித்தமாத்திரத்திலது அவரது கையில் வந்து சேர்ந்தது. கிருஷ்ணன் சக்கிராயுதத்தாற் சிசுபாலனது தலையைக் கொய்தெறிந்தார். இதையைதிஹாஸிகக்கதையென எவன் நம்புவான்? ஸ்ரீ கிருஷ்ணன் சக்கிராயுதத்தாலே சிசுபாலனைக்கொல்லவேண்டியது என்று இருந்தால் அவர் மனுஷ்ய சரீரத்தையேன் எடுத்திருக்கவேண்டும்? சக்கிராயுதமானது ஸ்ரீ கிருஷ்ணனது ஆக்ஞை மாத்திரத்தாலேயே வந்துபோமானால் வைகுந்தத்திலிருந்தே யவர் சிசுபாலனின் சிரஸ்ஸை வாங்குவதற்காகச் சக்கிராயுதத்தை யேன் அனுப்பியிருக்கக்கூடாது? இவ்வற்பக்காரியத்துக்காக அவர் மனுஷ்ய சரீரத்தை யேன் கொள்ளவேண்டும்? ஈசுவரன் தனதிச்சாமாத்திரத்தாலேயே யொருவனுக்கு மிருத்யுவைச் செய்யக்கூடுமே.அவர் மனுஷ்ய தேகத்தை யெடுத்தும் அவரிடம் போதுமான சக்தியிருக்கவில்லையா? அவர் தைவிக அஸ்திரத்தை யேன் ஸ்மரிக்க வேண்டும்;

ஸ்ரீ கிருஷ்ணன் ஈசுவரத்தன்மையை பொருந்தியவரென்பதை நாம் ஒத்துக்கொள்ளாதவர்களில்லை. ஆனால் நமது கொள்கையில் ஸ்ரீ கிருஷ்ணன் மானுஷ சக்தியைத் தவிர மற்ற சக்தியை வெளிக் காட்டவில்லை. அவர் சக்கிராயுதத்தை ஸ்மரித்தார் என்ற விருத் தாந்தம் உண்மையில் நிகழ்ந்ததல்ல. அது 'ப்ருக்ஷிப்தம்' என்றும் மானுஷயுத்தத்திலேயவர் சிசுபாலனைக் கொன்றார் என்று, மகாபார தத்திலேயே பிரமாணம் காணப்படுகிறது.

உத்தியோக பர்வத்தில் திருதாராஷ்டிரர் சிசுபாலவதத்தின் இதி ஹாஸத்தைப்பற்றிச் சொல்லுகிறார்:—

"ராஜஸூய யாகத்தில், சேதிராஜன், கருஷகன், முதலியவெல் லாவரசர்களும், எண்ணிறந்த புருஷர்களுடன் ஒரே யிடத்திற் கூடி யிருந்தார்கள். அவர்களுக்குள் சேதியரசனின் புத்திரன் ஸூர்ய னைப்போற் பிரகாசமுள்ளவன். சிறந்தவில்லாளி; ஒருவராலும் தோற் கடிக்க முடியாதவன். ஸ்ரீ கிருஷ்ணன் விநாடிப்பொழுதிலவனை ஜயித்து அவனைச்சேர்ந்த க்ஷத்திரியக் கூட்டத்தி னுற்சாகத்தைப் பங்கப் படுத்தினர். சிங்கம்போல் தேரிலேறிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த் துச் சிசுபாலனை சன்மானிக்க வந்த கருஷன் முதலானவரசர்கள் அவனை விட்டு விட்டு அற்பப் பிராணிகளைப்போலோடிவிட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் ஆயாசமில்லாமல் சிசுபாலனுடைய பிராணனை யெடுத்துப் பாண்டவர்களின் புகழையும் மானத்யையும் ரக்ஷித்தார்" என்று.

இவ்விடத்திலோவென்றால் சக்கிராயுதத்தைப்பற்றிய வார்த்தை யொன்றையும் காணோம். ஸ்ரீ கிருஷ்ணன தமது ரதத்தின்மீதேறி யொழுங்காக மானுஷ யுத்ததிற் பிரவர்த்தித்தாரென்றும், சிசுபால னையுமவனைச்சார்ந்தவர்களையும தோற்கடித்தாரென்று மிவ்விடத்திற் காண்கிறோம். எவ்விடத்தில் ஒரே கிரந்தத்தில் ஒரே விஷயத்தைப் பற்றி யிரண்டுவிதமாக அதாவது இயற்கைக்கு ஒத்ததாகவும், ஒவ் வாததாயும் வர்ணிக்கப்படுகிறதோ அவ்விடத்தில் அநைஸர்கிகமான (இயற்கைக்கு ஒவ்வாததான) வர்ணனையைக் கிரகிக்கத்தகாததெனத் தள்ளிவிட்டு, நைஸர்கிகத்தையே யைதிஹாஸிகமென்று கிரகிக்க

வேண்டும். புராணேதிஹாஸங்களில் பரஸ்பர விரோதங்களான விருத்தாந்தங்கள் காணப்படுமாயின, இயற்கைக் கொத்தவைகளையே கிரகித்துக்கொள்ள வேணும். அப்படிக்கில்லாதவைகளைக் கிரகித்தல் பயனற்றதாகும்.

சிசுபாலவிருத்தாந்தத்தை நாம் பரிசீலனை செய்தவளவில் கீழே விவரித்திருப்பதே ஐதிஹாஸிகமெனத் தெரியவருகிறது. ராஜஸூய யாகத்தின் மகாசபையில் க்ஷத்திரியர்களெல்லோரைக் காட்டிலும் ஸ்ரீ கிருஷ்ணனே சிரேஷ்டர் என்றங்கீகரிக்கப்பட்டது. அப்பொழுது சிசுபாலன் முதலிய சிலவரசர்கள் கோபத்தையடைந்து யாகத்தைக் கெடுப்பதற்காகச் சண்டை தொடுத்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனவர்களுடன் போர் செய்து அவர்களைத் தோற்கடித்துச் சிசுபாலனைக் கொன்றார். யாகம் நிர்விக்னமாய் நிறைவேறியது.

ஸ்ரீ கிருஷ்ணன் பெரும்பாலும் யுத்தத்தில் விருப்பமில்லாதவரென நாம் கண்டிருக்கிறோம். வல்லவர்களான அர்ஜுனன் முதலானவர்களிருக்கும்போது ஸ்ரீ கிருஷ்ணன் ஏன் சண்டைக்குப்போக வேண்டும்? யாகத்தைக் காக்கவேண்டிய பொறுப்பு ஸ்ரீ கிருஷ்ணனுக்கேற்பட்டது. அதைச் சரிவர நிறைவேற்றுவதே யவர் கடமை. தமது கடமையைச் செலுத்துவதற்காகவே அவர் யுத்தம் செய்து சிசுபாலனைக் கொன்றார்.

11-வது அத்தியாயம்.

பாண்டவர்களின் வனவாஸம்.

ராஜஸூய யாகம் முடிவுபெற்றது. கிருஷ்ணன் துவாரகை சென்றார். ஸபாபர்வத்தில் ராஜஸூய யாகத்தைத் தவிர வேறிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணனைக்காணவில்லை. பிறகு ஓரேயிடத்தில் அவரது பெயரிருக்கிறது.

சொக்கட்டான் ஆட்டத்தில் யுதிஷ்டிரர் துரௌபதியைத் தோற்றார். பிறகு அவளுடைய கூந்தலைப்பிடித்திழுத்தலும், ஸபை நடுவில் அவளது வஸ்திராபஹாரமும் நிகழ்ந்தன. மகா பாரதத்தின்

ஸ்ரீராமாநுஜார்ய திவ்ய சரிதைச்சுருக்கம்.

மேலேயெடுத்துக்காட்டிய ஸ்ரீமந்நாதமுனிகள் முதலானார்களின் காலநிர்ணயம் சரியானதென்பதற்குத்தக்க ஆதாரவாகவும், பிற்காலச் சோழவரசர் முதலானார் சிலர் காலத்தை நிச்சயமாக நிர்ணயித்துக்கொள்வதற்குத் தகுந்த சாதகமாகவும் ஸ்ரீவைணவப் பிரபந்தங்களிற் சொல்லப்படுங் காலநிர்ணயஞ் சரியானதென்பதற்கோர் சான்றாகவும் இச்சரிதைச் சுருக்கமெழுதப்படுகிறது.

ஸ்ரீராமாநுஜாசாரியார் கலி 4118. கி. பி. 1017 சாலி 939 வதான பிங்கள௵ சித்திரை ௴த்தில் திருவவதாரம்.

இவருக்குப் பெரியதிருமலைநம்பி நியமனப்படி திருத்தகப்பரான கேசவசோமயாஜியார் இளையாழ்வார் என்றும், திருக்கோட்டியூர்நம்பி எம்பெருமானாரென்றும், தெய்வப்பெருமாள் எதிராஜரென்றும், சரஸ்வதி பாஷ்யகாரரென்றும், திருவரங்கப்பெருமாளரையர் லக்ஷ்மணமுநி, இராமாநுஜரென்றும், ஆதிகேசவப்பெருமாள் பூதபுரீசரென்றும், திருவேங்கடமுடையான் தேசிகோத்தமரென்றும், நம்பெருமாள் உடையவரென்றும், திருமாலையாண்டான சடகோபன்பொன்னடியென்றும் நாமகரணஞ் செய்வித்தனர்.

3வது திருநக்ஷத்திரமான கலி 4121 கி. பி 1020 சாலி 942 வதான ரௌத்திரி வருஷத்தில் சௌளம்.

5வது திருநக்ஷத்திரமான கலி 4123 கி. பி 1022 சாலி 944 வதான துந்துபி வருஷத்தில் அக்ஷராப்பியாசம்.

7வது திருநக்ஷத்திரமான கலி 4125 கி. பி 1024 சாலி 946 வதான ரக்தாக்ஷி வருஷத்தில் உபநயனம்.

16வது திருநக்ஷத்திரமான கலி 4134 கி. பி. 1033 சாலி 955 வதான ஸ்ரீமுக வருஷத்தில் திருக்கல்யாணம்.

17வது திருநக்ஷத்திரமான கலி 4135 கி. பி 1034 சாலி 956 வதான பவ வருஷத்தில் திருக்கச்சிநம்பிகளுடன் சாமசைங்கர்யம்.

18வது திருநக்ஷத்திரமான கலி 4136 கி. பி 1035 சாலி 957 வதான யுவ வருஷத்தில் ஸ்ரீபெரும்பூதூரிலிருந்து திருத்தாயாருடன் பெருமாள்கோயிலுக்கெழுந்தருளி யாதவப் பிரகாசனிடத்தில் வேதாந்த பாடங்கேட்க ஆரம்பித்தது.

21வது திருநக்ஷத்திரமான கலி 4139 கி. பி 1038 சாலி 960 வதான பகுதானிய வருஷத்தில் ஆளவந்தார் பெருமாள் கோயிலுக்கெழுந்தருளிக் குளிரக்கடாக்ஷித்து ஆமுதல்வனென்றனுக்கிரகித்த ருளியது.

24வது திருநக்ஷத்திரமான கலி 4142 கி. பி 1041 சாலி 963 வதான விஷு வருஷத்தில்பெருமாள் கோயிலிலிருந்து பெரியநம்பியுடன் கோயிலுக்கெழுந்தருளி ஸ்ரீஆளவந்தார் திருநாடலங்கரித் திருப்பதைக்கண்டு அவர் திருவுள்ளத்தைக் குறிப்பாலறிந்து கொண்டு மிக்கதுக்காக்கிராந்தராய் மீண்டும் பெருமாள்கோயிலுக் கெழுந்தருளியது.

30வது திருநக்ஷத்திரமான கலி 4148 கி. பி 1047 சாலி 969 வதான சர்வஜித் வருஷத்தில் ஆச்ரமஸ்வீகாரஞ் செய்தருளியது.

31வது திருநக்ஷத்திரமான கலி 4149 கி. பி 1048 சாலி 970 வதான சர்வதாரி வருஷத்தில் கூரத்தாழ்வான் முதலியாண்டான் முதலியோர் பெருமாள் கோயிலுக்கெழுந்தருளி ஆசிரயித்தது.

33வது திருநக்ஷத்திரமான கலி 4151 கி. பி. 1050 சாலி 972 வதானவிகிருதிவருஷத்தில்யாதவப்பிரகாசன்ஆசிரயித்துக்கோவிந்த ஜீயரென்று திருநாமம் பெற்றுத் திருநாடலங்கரித்தது.

34வது திருநக்ஷத்திரமான கலி 4152 கி. பி 1051 சாலி 973 வதானகரவருஷத்தில் திருவரங்கப்பெருமாளரையருடன் கோயிலுக் கெழுந்தருளியதுமுதல் 39வது திருநக்ஷத்திரம்வரை திருமாலை யாண்டான் முதலிய ஐந்து ஆசார்யர்களிடமும்போய் உபயவேதாந் தங்களையுங் காலக்ஷேபஞ்செய்தருளி வேதாந்தசாரம், வேதாந்த

தீபம், வேதார்த்த சங்கிரகம், கீதாபாஷ்யம், கத்யத்ரயம் முதலிய கிரந்தங்களை யருளிச்செய்தது.

40வது திருநக்ஷத்திரமான கலி 4158 கி. பி. 1057 சாலி 979 வதான ஹேவிளம்பி வருஷத்தில் திக்குவிஜயாரம்பம்.

65வது திருநக்ஷத்திரமான கலி 4183 கி. பி. 1082 சாலி 1004 வதான துந்துபி வருஷத்தில் திக்குவிஜயசமாப்தி.

திக்குவிஜய யாத்திரை 25வருஷம் என்றதை,

"இவ்வண்ணமிருபத்தையாண்டெட்டுத்திசைகளினுமெய்தி
அவ்வயின்மதங்களெல்லாமடக்கிப்போந்தரங்கநாதன்
செவ்வடிக்கமலஞ்சூடிச்சிறந்தசீர்ப்பெரும்பூதூரர்
கவ்வையொன்றின்றியன்பர்தம்மொடுகளிக்குங்காலை."

என்பதனாலறிக.

மேற்குறித்த காலத்திலேயே 1வது குலோத்துங்கனது மரணமும் அவனது குமாரனான விக்கிரமனென்னும் அகளங்கனது முடிசூட்டு நடந்திருக்கவேண்டும். 1வது குலோத்துங்கன் குமாரனே விக்கிரமனென்பதும் இவனுக்கு அகளங்கனென்றும், தியாக சமுத்திரமென்றும் பெயருண்டென்பதும் பின் வரும் பிரமாணங்களானன்கு விளங்குகின்றது.

மறக்கலியுஞ்சுங்கமுமாற்றியறத்திகிரி
வரித்திகிரிவலமாகவந்தளிக்கும்
ஆரிற்பொலிதோளபயற்கும்—பார்விளங்கத்
தோன்றியகோன்விக்கிரமசோழன்.
(விக்கிரமசோழ தேவருலா)

தவிராதசுங்கந்தவிர்த்தோன்—கவிராசர்
போற்றும்பெரியோனிவன்பின்பூதலங்கள்
ஆற்றும்பெரியோனகளங்கன்
(குலோத்துங்க சோழ தேவருலா)

......போர்த்தொழிலால்
ஏனைக்கலிங்கமேழினையும்போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே. (விக்கிரமசோழதேவருலா)

இவனை ஆசார்யனாகிய இராமாநுஜாசாரியார் நியமனப்படி திருவரங்கம் பெரியகோயிலில் ஐந்தாவது சுற்றுத் திருமதின் முதலிய அநேக கைங்கர்யங்கள்செய்தவனென்ப. மேற்கூறிய ஸ்ரீரங்க முடையவர் சந்நிதி முன்பக்கத்துள்ள 4வது சுற்றுத் திருமதிலின் கிழோரத்துக் காணப்படுஞ் சிலாசாஸனத்துக்கண்ட இருவர் இவ்வகளங்கனது †வேளைக்காரரும், உறங்காவில்லி தாசரது மருமக்களும், தமக்கு அவ்வகளங்கன் நிவேதனமாகக் கொடுக்கும் பொன்களை எம்பெருமானார் திருமடத்திற்கு திருக்கைவழக்கமாக வழங்கி வந்தவருமாகிய வண்டருஞ்சொண்டருமென்பர்.

இவ்விக்கிரமன் அநேகம் சிவன்கோயில் திருப்பணிகளுஞ் செய்திருக்கிறனென்று பல சிலாசாஸனங்களால் நன்கு விளங்குகின்றது. இத்திருப்பணிகள்செய்ததாலும் இராமாநுஜாசாரியாரை ஆசிரயிப்பதற்கு முன்னென்ப.

திருவானைக்காவென்னும் சம்புகேச்சுரச் சிலாசாஸனத்துக் கண்ட அகளங்கநாடாள்வார் இவ்வகளங்க நாட்டாழ்வாரல்லர். நிற்க,

இராமாநுஜாசாரியர் மேற்குறித்த காலம் முதல் எழுபத்தொன்பதாவது திருநக்ஷத்திரம் வரை (பதினான்கு வருஷம்) கோயிலிலேயே யெழுந்தருளியிருந்து கூரத்தாழ்வான் முதலியாண்டான் முதலியவர்களுக்குக் காலக்ஷேபஞ் சாதித்துக்கொண்டு ஸ்ரீபாஷ்யத்தில் மூன்றில் இரண்டு பங்குவரை யருளிச்செய்தனர். 80வது திருநக்ஷத்திரமான கலி 4198 கி. பி. 1097 சாலி 1019 வதான ஈசுவரவருஷத்தில் விக்கிரமனென்னும் அகளங்கநாட்டாழ்வார் பரமபதித்ததும், அவன் குமாரனான 2வது குலோத்துங்கன், சென்னி அநபாயன் என்னும் கிருமிகண்டசோழன் முடிசூட்டும் நடந்திருக்கவேண்டும். விக்கிரமனென்னும் அகளங்கன் குமாரன் 2வது குலோத்துங்கனென்றும் சென்னியநபாயன் என்றுஞ் சொல்லும் கிருமிகண்டனென்பது:—

......இவன் பின்புபூகலக்கள்

---

†வேளைக்காரராவர்—அவ்வப்பொழுது செய்யவேண்டிய ராஜகாரியஞ் செய்யாதபோது குத்திக்கொண்டு மாய்பவர்.

"ஆற்றற்றிருத்தோளகளங்கன்—வேற்றோர்
விரும்பரணில்வெங்களத்திவேட்டுக்கலிங்கப்
பெரும்பரணிகொண்டபெருமான்—தரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்கசோழன்"

(குலோத்துங்க சோழதேவருலா)

"புரந்தரனேமிபொருவுமில
தரந்தான்விக்கிரமசோழன்—பரந்தபவென்
றுஅய்பெயர்கொண்டகிலாண்டமும்புரந்த
சேஎய்பெரியதிருக்குலத்து—நாயகன்
சிற்றம்பலமுந்திருப்பேரம்பலமும்
மற்றம்பலபலமண்டபமுஞ்—சுற்றிய
மாளிகையும்பீடிகைம்மாடமுங்கோபுரமுஞ்
சூளிகையுமத்தெருவுந்தோரணமும்—ஆளுடையான்
கோயிற்றிருக்காமக்கோட்டமுமக்கோயில்
வாயிற்றிருச்சுற்றுமாளிகையுந்—தூயசெம்
பொன்னிற்குயிற்றிப்புறம்பிற்குறும்பனைத்தும்
முன்னிற்கடலகழின்மூழ்குவித்த—சென்னி"

(இராஜராஜ சோழ தேவருலா)

"ஈரருமங்கத்துச்சிலவருடமன்னவர்கள்
பாரருமன்னர்பிரான்பாகவதரிடத்திலென்று
மாராதகாதலுமகவர்க்காட்டாழ்வான்
ஏரரும்வைகுந்தநாடாளவேகினன் (794)

மாசறுகிருமிகண்டன்மற்றவன்மௌலிசர்க்கி
யாசறவுலகமெல்லாமாண்டனன். (795)

(ஏட்டுப்பிரதியாயுள்ள ஓர் குருபரம்பரை)

இவற்றால் நன்கு விளங்குதல் காண்க.

அவன் பலாத்காரமாகச் சகல சமயத்தாரிடத்தும் சிவனலாற் பரதெய்வம் வேறில்லையென ஒரு பட்டயமெழுதிக் கையொப்பம் வாங்கஆரம்பித்ததும், அதனைக் கேட்டுக் கூரத்தாழ்வான் முதலானோர்களுடைய பிரார்த்தனைக்கிணங்கி வெள்ளை சாத்திக்கொண்டு மேனாட்டுக்கெழுந்தருளியதும், கூரத்தாழ்வான் குலோத்துங்கன் நீட்டிய பட்டயத்தில் "த்ரோணமஸ்தி தத: பரம்" என்று எழுதிக்

கையொப்பமிட்டதும். அதற்காகக் குபிதனான அவன் முன்னேனைக் கண்ணிடந்தெறிந்ததும், பெரியநம்பி பரமபதித்ததும் அக்கிருமிகண்டன் அக்கிரமமிக்குத் தில்லைத்திருச்சித்திரகூடஞ்சென்று அங்குள்ள பேரம்பலமென்னும் இரத்தினசபையைப்பிடித்து மன்றுக் கிடங்கண்டதும் நடந்ததென்ப. இவ்விடயங்கள்:—

அனையானுறையூரிருந்தத்திருநாடு
தனையளித்திடுமகளங்கனெனும்பெயர்தரித்த
வினையிலானுயிர்விடுத்துமேலாம்பதமதனிற்
புனையுமாமணிமண்டபம்புகுந்தவைகினனால் (1140)

பின்னர்வேந்தெனக்கிருமிகண்டனெனும்பெயரோன்
அன்னநாட்டினையாளுநாட்டாமதகுணனாய்க்
கன்னிபாகனேபரனெனக்கருதியைம்புலன்கள்
தன்னைவென்றிடாக்குருக்களாஞ்சைவரைக்கொண்டே, (1141)

சிவனலாற்பரனிலையெனப்பட்டயந்திருத்திப்
புவனமீதுளமற்றையசமயத்தின்புலவோர்
எவரையும்மழைத்திராசதண்டனையினையயற்றி
யிவர்கள்கையெழுத்ததனிடைவாங்குவானமைந்தே. (1142)

என்கிறபடியே உறையூரிலிருந்து நீதிதவறாது அரசு புரிந்துகொண்டிருந்த அகளங்கநாட்டாழ்வான் திருநாடடைந்த பின்பு அவன் மைந்தனாகியகுலோத்துங்கன் என்னும் கிருமிகண்டன் அச்சோணாட்டரசனாக மகுடம் புனைந்தனன். மகுடம் புனைந்த பின்னாட்களுக்குள்ளேசைவக்குருக்களின் போதனையினாலேதாமதகுணமிகுந்து "சிவாத்பரதரம் நாஸ்தி" என்றெழுதிய பட்டோலையிற் சகல மதத்தினர்களிடத்தும் பயமுறுத்தியும கடுந்தண்டனை விதித்தும்கையெழுத்து வாங்குவதற்காக இராஜபடர்கள் வருகிறார்களென்பதையறிந்து கூரத்தாழ்வான் உடையவரிடம் வந்து "துராத்மாவான சென்னியநபாயன் சபைக்குத் தேவரீரெழுந்தருளலாகாது; அடியேன்போகின்றேன்; தேவரீர் வெள்ளை சாத்திக்கொண்டு இத்தேசத்தைவிட்டு இதர தேசத்துக்கெழுந்தருளவேண்டும்" என்றேகாந்தமாக ப்ரார்த்திக்க, அவருமதற்கிசைந்து சில கைங்கர்ய பரர்களோடு கூட ஒருவருக்குந் தெரியாமல் மேனாட்டுக்கெழுந்தருளினர்.

இராமாநுஜாசாரியார் சாலிவாகன சகாப்தம் 1019வதான ஈசுவர வருஷத்திலேயே மேனாட்டுக்கெழுந்தருளினரென்பது "ஆய்ந்த சகாத்தமாயிரத்துப் பத்தொன்பதனிலரங்கநின்று, போந்து பன்னீராண்டாங்கன் புகழ்தாள் வளர்த்த பெரும்பூதூர், வேந்தன்" என்னும் இராமாநுஜார்ய திவ்யசரிதையின் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிற செய்யுளடிகளானனகு விளங்குகின்றது.

அப்பால் சென்னி குலோத்துங்கனென்னும் அநபாயனது சேவகர்களினிம்சை பொறுக்க முடியாமல் கூரத்தாழ்வான் காஷாயதாரணஞ்செய்துகொண்டு திரிதண்டதாரியாய்ப் பெரியநம்பியோடுகூட அக்கிரமிகண்டன் அவையை யணுகினர். அவரைக் கண்டதும கிருமிகண்டன இராமாநுஜாசாரியாரென நினைகதுத் தன் கையில வைத்திருந்த அங்கப்பட்டயத்தைக கொடுத்துக் கையெழுத்திடும்படி சொல்ல அதனை வாங்கிக்கொண்டவனையுமங்குள்ள வித்வான்களையும் பார்த்து,

ஸநக: ஸ்ராவஸீவஸாத்ராடீஜ்யோ: ஸூக்ஷாலு யஜ்ஞாடா।
கவரொய்யோருத்ர ஸ்ஹாகொயிகவெஷு ஹண்யு தா॥
ஏக:ப்ராஸீஸரத்பாதமந்ய:ப்ராக்ஷாளயந்முதா
அபரோதீதரந்மூர்த்நாகோதிகஸ்தேதஷ்கண்யதாம்.

என்று அதாவது திரிமூர்த்திகளிலொருவன் உலகை யளத்தற்கொரு திருவடியை யுயரவெடுத்தனன். மற்றொருவன் அதனைக்கண்டு உவகைகொண்டு உழுவலன்போடு தனதுகர கமண்டலதீர்த்தத்தினாலே திருமஞ்சனஞ்செய்தனன் பின்னுமொருவன் இது எம்பெருமானது ஸ்ரீபாததீர்த்தமென்றுட்கொண்டு பக்தியோடு சிரசாவகித்தனன். இம்மூவருள் உயர்ந்தவன் யாவன்? நீங்களே நன்றாயோர்ந்துணர்ந்துணர்மின் என்றுரைத்து,

"த்ரோணஷ்ஷிவதத:பரம்" "த்ரோணமஸ்தித:பரம"

என்று எழுதி அதாவது சிவமென்னும் குருணியென்பது மரக்காலளவைக்குப் பெயராதலால் அதற்கு மேற்பதக்கென்னுமோரளவுமுண்டென்று எழுதிக்கையெழுததுச் சாத்தினர்; பெரியநம்பியுங் கூரத்தாழ்வானிடமிருந்ததனைவாங்கி அரசனையுமவையோரையு நோக்கி,

யச்சௌசநிஸ்ஸ்ருதஸரித்ப்ரவரோதகேந தீர்த்தேந
மூர்த்நி வித்ருதேந ஸிவஸ்ஸிவோபூத்,
யச்சௌசநிஸ்ருதஸரித்ப்ரவரோதகேநதீர்த்தேந
மூர்த்நிவித்ருதேநஸிவச்சிவோபூத்.

என்று, அதாவது பிர்ம்மா திருமஞ்சனஞ் செய்யுங்காலே ஸர்வேசுவரனது திருவடிகளிலிருந்து கீழே பெருகியதும் அதனாலே மிகவும்பரிசுத்தமானதும் அப்பெருமையையுணர்ந்து ஜடாமகுடத்தாலே தாங்கியதுமான நதிகளுக்குள்ளே மிகவுஞ் சிறந்ததான கங்காதீர்த்தத்தாலேசிவபெருமான் பரிசுத்தனாயினனெனின்; எவன் பரமபுருஷன் என்பதை ஆராய்ந்தறியுங்கள் என்று சொல்லிக்கையொப்பமிட்டனர்.

இவற்றையெல்லாங் கேட்ட குலோத்துங்கன் கோபாவேசத்தோடு இவ்விருவர்கள் கண்ணையும் பிடுங்கி வெருட்டி விடும்படி ஏவலாளரை யேவினன். அதனைக்கேட்டவுடனே கூரத்தாழ்வான் இந்தக் குதிருட்டிகளாகிய வித்வான்களையும், கொடுங்கோலரசனாகிய உன்னையும் பார்க்கும்படி மகாபாபம் பண்ணின என் கண்களுக்கு இது தக்கதண்டனைதானென்று சொல்லித் தன் கையாலேயே கண்களைப் பிடுங்கி யவன்முன்னே யெறிந்து,'தர்சனத்துக்காகத் தர்சனங்கொடுக்கப்பெற்றோம்' என்று பரமசந்துஷ்டராயெழுந்தருளியிருந்தனர். பெரியநம்பியும் நேத்ரோத்பாடனஞ் செய்யப்பட்டனர். அவ்விருவரையுமங்கிருந்த வொருபாகவதர் அழைத்துக்கொண்டு கோயில் நோக்கிவரும்பொழுது அவ்வழியிலேவிழிவேதனைபொறுக்கமாட்டாமல் பெரியநம்பி பரமபதப்பெருநாடலங்கரித்தனர். தம்முடைய க்ஷேமத்தை எம்பெருமானார் நியமனப்படி வினவவந்த மாருதிச்சிறியாண்டானிடம் கூரத்தாழ்வான் எம்பெருமானாரிடம் சமர்ப்பிக்கும்படி யெழுதிக்கொடுத்த:—

காலயுக்தாஷ்டகாமத்ய இதி ப்ரோக்தா மஹாகுரோ:
யாமுநார்ய பதாம்போஜ ஸுஸ்ரூஷாயா பவத்ததா॥
காளயுக்தாஷ்டகாமத்ய இதி ப்ரோக்தா மஹாகுரோ:
யாமுனார்ய பதாம்போஜ சிச்ரூஷாயா பவத்ததா:

என்ற இந்தச் சாமகலோகத்திலே யாதொரு ஆளவந்தாருடைய திருவடிகளிற் செய்யும் கைங்கர்ய மெப்பொழுது லபித்ததோ அப்பொழுது இக்ககனர் மாசக்துத் திச்சிரோட்டகையின் மத்திமதிதியாகிய காளாஷ்டமியாகுமென வருஷம் முதலியவொன்றுங் காட்டாமலிருத்தலாலேஎந்தக்காலத்து இராமாநுஜாசாரியார் மேனாட்டுக்கெழுந்தருளினாரோ அந்தக் காலமாகிய மார்கழி மாதத்துக்காளாஷ்டமியென்று நன்கு விளங்குவது காண்க. பெரியநம்பி திருநாடலங்கரித்தவுடனே சென்னியநபாய குலோத்துங்கன் சினமிகுந்து, 'நம் நாட்டின விண்டுவினலயமே யில்லாமற் செய்துவிடுகிறேன்' என்று சபதஞ்செயதுகொண்டு, முதன் முதலிற்திருச்சித்திரகூடஞ்சென்று பேரம்பலமென்னும் இரத்தினசபையை பிடித்துக்கடலிலெறிந்தனன். இதனை,

பெரியநம்பிபரமபதப்பெருநாடடைந்தபின்கனக
கிரியையொத்தவலிகெழுந்தோட்கிருமிகண்டன்மணிப்பசும்பொன்
புரிசைத்திருச்சித்திரகூடம்போய்க்கோவிந்தராஜர்தமை
விரியுங்கடலிலெடுத்தெறிவான்விரும்பிவிரைவோடேகினன். (1216)
வருமங்கவனெஞ்சுணர்ந்துகண்வளர்சித்திரகூடத்தைவிட்டுத்
திருமாதுடனேபூமாதுதிருவாபரணமர்ச்சகர்மற்
றொருவர்தமையுமவன்காணுமாறுமுருற்றிவேங்கடமால்
பெருமால்வரைசேர்ந்தான்மதுரைபிரிந்துதுவாரபதியடைந்தோன்.
ஆயகாலைகிருமிகண்டனணியார்தில்லைநகரத்துண்
மேயதிருச்சித்திரகூடமேவிவிழியானேக்கியவண்
மாயன்மூதன்மற்றியாவரையுங்காணுகியமணிப்பொற்
கோயிலதனைப்பொடிப்படுத்திக்குறையாக்கடலிட்டவன்போனன். ()

என்ற வட்டப்பிரதியாகவுள்ள செய்யுட் குருபரம்பரை 3000த்தி லுள்ள பாடல்களும்,

ஸ்ரீமத்ராமாநுஜ தவ்ரோஹிதா நாம ராஜேந்த்ர நிந்த்ய ஸ்ரீஹம்
வநநாயகஸ்யவிஷ்ணோ: யாம்ஜேவம் வாலஹித விக்ரகம்யமே
வ்யவாயே ரவ்யயாவியலிஸவா தயா: வைஷ்ணவ'' தூர்மேதாஸ்வஜத
புரோகிதா நமோரோதீர்ப்பித்யஸ்த்ரிபுவநநாயகஸ்யவிஷ்ணோ:, தாமௌ
கம் ஸாலஹித சித்ரகூடமுக்யம் பாதோயே: பயஸிஸபாதயாம்பபூவ''

என்று குருபரம்பரையிலும் இராமானுஜார்ய திவ்ய சரிதையிலும் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிற இந்த சுலோகமும் நன்கு விளக்குகின்றன காண்க.

இந்த சுலோகத்தின் பொருள் தனது குலத்தினாதை புரோகி தனது வார்த்தையையே யனுசரித்து நடப்பவனும் இயல்பாகவே கெட்டபுத்தியையுடையவனுமாகிய அந்தச் சென்னிகுலோத்துங் கன் திரிலோக நாயகனாகிய விஷ்ணுவினது மிகவு மழகியதாகிய தில் லைத்திருசித்திரகூடம் முதலிய திருக்கோயில்களின் கட்டடத்தை யிடிதனுச சமுத்திர ஜலத்திலே கொட்டிவிடும்படி செய்தனனென் பதாம். அன்றியும், சென்னியநபாய குலோத்துங்கனென்னும் கிருமிகண்டனை சித்திரகூடதனையிடித்து மன்றுக்கிடங்கண்டனனென்பதை அவ்வரசன் காலத்தேயிருந்த ஒட்டக்கூத்தப்புலவர் "தில்லைமன்றிற்சிறுதெய்வக்,கொலலைக் குறம்புகொகுத்தெடுத்து" என,(1)குலோத்துங்க சோழனுலாவிலும்,"புறம்பிற்குறும்பனைத்து, முன்னைக் கடலகழின் மூழ்குவித்த-சென்னி" என,இராஜராஜனுலா விலும், "முன்றிற்கிடந்த கருங்கடல்போய் முன்னைக்கடல் புகப்பின் னைத்தில்லை, மன்றுக்கிடங்கண்ட கோண்டல்பெற்ற மரகத மேரு வை (2) வாழ்த்தினவே" என தக்கயாகப்பரணியிலும் விரித்து விளக்கியிருத்தல் காண்க.

இராமானுஜாசாரியார் மேனாட்டுக் கெழுந்தருளியதும் பெரிய நம்பி பரமபதித்தருளியதுமான சாலிவாகன சகாத்தம் 1019வதான ஈச்சுவர வருஷத்திலேயே கிருமிகண்டன் சித்திரகூடத்தை யிடித்து மன்றுக்கிடங்கண்டனனென்பது சமீப காலத்தில் சோணாட்டிலொரு பெரியார் திருமாளிகையிலிருந்து கிடைத்த பழைய ஏட்டுப்பிரதி யான இராமானுஜ திவ்யசூரிசரிதையில் மேற்கோளாகக் காட்டப் பட்டிருக்கிற சீர்திருத்தமான

"அம்பொற்குடைசககனாயிரத்தினொடுறுபத்
தொன்பதாமோதும்வருடத்துத்—தென்பால்வீழ்
சென்னிகுலோத்துங்கன்சித்திரகூடத்திருமால்
தன்னையலையெறிகடான்."

---

(1) இரண்டாவது குலோத்துங்கன். (2) இராஜராஜன்.

என்ற ஒட்டக்கூத்தர் பாடிய பாடல்களை யநுசரித்த பழம் பாடலானும் நன்கு விளங்குகிறது. இதுவே சரியான பாடமென்பதை "ஐய்ந்த சகாத்தமாயிரத்துப்பத்தொன்பதனிலசங்க மின்று-போந்து பன்னீராண்டங்கண் புகழ்கான் வளர்த்த பெரும்பூதூர் வேந்தன்" என்ற முன்னர்க் காட்டிய பாட்டு வலியுறுத்துகின்றது. சித்ரகூடம் இடையிற் சீர்குலைந்து பின்னர்ச் சீருற்று விளங்கிக்கொண்டிருப்பது போல இவ்வெண்பாவும் இடையிற் சீர்கெட்டுத் தோன்றி இதுபோழ்து சீர்திருந்தி விளங்காநின்றது.

பழைய ஏட்டுப் பிரதிகள், அச்சுப்பிரதிகளாயிருக்கிற செய்யுட் குருபரம்பரைகள் வசன குருபரம்பரைகள் முதலிய வைணவ நூல்களிற் சொல்லப்பட்டிருக்கிறதற்கு மாறாக வீரசைவராகிய ஒட்டக்கூத்தர் குலோத்துங்கன் 'நாம் நினைத்தபடி முடிக்க முடியாமற் போயிற்றே' என்ற மனக்குறை தீர்ந்து சந்தோஷிக்கும்படி "முன்றிற்கிடந்த கருங்கடல் போய் முன்னைக்கடல்புகப் பின்னைத்தில்லை, மன்றுக்கிடங் கண்டகொண்டல்" என வாசிகமாகப் பிரீதிகாரியத்தைச் செய்துள்ளார் போலும் கவியானைகள் 'தா அனுட்டித்தனுது நிருபப்" என்னும் மதங்கொண்டு உண்மைக்கு மாறாக் கூறுதல் இயல்பென்பதனை மஹா வீரசைவராகிய வெங்கைக் கோவையுடையார்..... திருப்பேரம்பலம செய்ய, தூய பொன்னணி சோழனீடுழி பார, ஆபயநபாயன்" என்ற பெரியபுராண முடையார் கூற்றுக்கும். "சிற்றம்பலமுந் திருப்பெரும் பேரம்பலமும், மற்றும் பலபல மண்டபமும, பொன்னிறகுயிற்றி" என்ற கூத்தர் கூற்றிற்கும் மாறாகவும் சிதம்பரத்திலுள்ள பேரம்பலத்தை பொன்மேய்ந்தவனெனத் திருப்பாய்த்துறை திருமாணிக்குழி முதலிய விடங்களிற் காணப்படும சிலாசாசனங்கட்கு மாறாகவும சிற்றம்பலம் கனகஸபை என்பவற்றிலுள்ள சிறுமை, கனகம் என்னும் அடைமொழிகள் பிறிதினியைபு நீக்கவந்த விசேடம 'அந்யயோக விவச்சேதம்" என நன்கறிந்திருந்தும தில்லைத் திருச்சித்திரகூடத்துச் சிவபெருமான் நடனஞ் செய்தருளும கனகஸபைக்குத் திருச்சிற்றம்பலமென்றும் நடனம் புரியும் அச்சிவபெருமானுக்குச் சிற்றம்பலவாணரென்றும், கோவிந்தராஜப்பெருமாள் அறிதுயிலமர்ந்தருளும் இரத்ன

ஸபைக்குப் பேரம்பலமென்றும் அறிதுயிலமர்ந்தருளும் அந்தக் கோவிந்தராஜப்பெருமாளுக்குப் பேரம்பலவாணரென்றும திருநாமமுண்மை புராணப் பிரசித்தமெனத் தெளிவாகத் தெரிந்திருந்தும்,

"மற்றின்பமுண்டென்பதன்றலிவன்தாவந்தவின்பம்
சிற்றின்பமென்பதுவெங்கைபுரேசர்திருநடன
முற்றின்பஞ்செயயுஞ்சிதாகாசந்தன்னையுணர்வுடைமை
பெற்றின்பமெய்தினர்சொல்வர்சிற்றம்பலப்பேர்புனைந்தே

என முழங்கியிருக்கல் காண்க.

இதுவரை கூறிய வாற்றால 1வது குலோத்துங்கன் மகனாகிய விக்கிரமனென்னும அகளங்கன பட்டத்துககு வந்த பதினோராவ தாண்டில் பரமபதித்தனனென்றும், அப்பொழுதே 2வது குலோத்துங்கனென்னும் கிருமிகண்டன் பட்டத்துககு வந்தனனென்றும், பட்டக்கு வநத சினநாட்களுக்குள்ளே ராமாநுஜாசார்யார் வெள்ளை சாத்திக்கொண்டு மேனாட்டுககெழுந்தருளினரென றும், அந்தச்சமயத்திலே பெரிய நம்பி பரமபதித்தருளினரென்றும், பரமபதித்த வுடனே அக்கிரமக் காரனாகிய அக்கிருமிகண்டன் சித்திரகூடத்தைத் தகர்த்தெறிநதனனென றும, தெளிவாகத தெரிதல காண்க.

81வது திருநக்ஷத்ரமான கலி 4199 கி. பி 1098 சாலி 1920 வதான பகுதானிய தைமீ சுக்லபக்ஷம் சதுர்த்தசி திதி வியாழக கிழமை புனர்பூச நக்ஷத்ரமும கூடிய சுபயோக சுபதினத்தில் யாதவாத்ரியில் திருநாராயணன் ஸேவை கிடைததது:—

ஶகவர்ஷே ஸஹஸ்ரே து, ஶதேஷு விம்ஶதி ஸம்யுதே।
வத்ஸரே பஹுதாந்யாக்யே புஷ்யமாஸே ஸிதேதரா॥
ஶுக்லபக்ஷே சதுர்தஶ்யாம் குருவாரே புநர்வஸௌ
ஆவிர்பபூவ பகவாந் தத்ர நாராயணோ ஹரி:॥

சகவர்ஷேதுஸாஹஸ்ரே வர்ஷேவிம்சதிஸம்யுதே
வத்ஸரேபஹுதாந்யாக்யேபுஷ்யமாஸேசிதேதரா,
சுக்லபக்ஷேசதுர்தச்யாம் குருவாரேபுநர்வஸௌ
ஆவிர்பபூவபகவாந்தத்ரநாராயணோஹரி:

அங்கயதுகிரியில் சொப்பனத்திற் கண்டபடி திருநாராயணன் எழுந்தருளியிருக்குமிடத்தைக் காடுவெட்டித் தேடிக் கண்டுபிடிப்பதற்கும் கண்டுபிடித்த இடத்திற் பழையபடி கோயில் கட்டுவதற்கும் டில்லிக்குப் போய்ச் செல்வப் பிள்ளையை யெழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்து திருநாராயணனுடன் சேர்த்து பிரதிஷ்டை செய்வதற்கும் அக்கோயிலில் திருவாராதனம் உத்ஸவம் முதலியவைகள் வெகு சிறப்பாக இடையீடின்றி நடந்து வருவதற்கும், பிரீதி பூர்வகமாக வேண்டிய உதவி புரிந்தவன் விட்டில தேவராயனென்னும் கொங்குநாட்டரசனைப இவன் அந்நாட்டுக்கு முப்பத்தாறுவது அரசனான வல்லாளராஜன மகன் இவனுக்குப் பித்திதேவனென்னும் பெயருமுண்டு இவன் மனைவியின் பெயர் சந்தாதேவி. இவன் குமாரன் நரசிங்கராயன இவன் மதம் ஜைநம், இவன் வமிசத்தினர் ஒளஜளர் என்று சொல்லப்படுவர். ஒளஜளரென்பது இப்பொழுது போஜளரென்று வழங்கப்படுகிறது யதுகுலத்திற் பிறந்த ஜாளனென்னு மோரரசன வேட்டையாடுதற்கு சிம்ஹாசலத்திற்கு வந்திருந்தனன். அப்பொழுது அம்மலையில தவம்புரிந்து கொண்டிருந்த தபஸ்தன் என்னும் முனிவனை ஓர் புலிபாய்ந்துகொலை யத்தனித்தது. அதுகண்ட அவ்வரசன் அப்புலியை ஒரே பாணத்தினால் கொன்றனன். அதனை அறிந்த முனிவரன் மிக வியந்து அவ்வரசனுக்கு ஒய்சளனென்று சிறப்புப்பெயர்கொடுத்து ஆசிர்வதித்தனன். கன்னட பாஷையில ஒய்சளமென்ற சொல்லுக்கு விஜயம் என்பது பொருள். அதனையுடையவன் ஒய்சளன அவன் வமிசத்திற் பிறந்தோர் ஒளசளரென்று பெயர்க்காரணம் கூறுப.

இவனது ஓர் துவாரசமுத்ரம் ஹளிதுபீட நகரென்றுஞ் சொல்லுப. இவன அலகூரென்ற காந்திபுரத்துள்ள அரண்மனையிலே கலி 4199 கி. பி 1098 சாலி 1020வதான பஹுதான்யவருஷ சித்திரை மாசத்தில் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டான். பின்னர் அருகுள்ள அநேக அரசர்களையுஞ் ஜெயித்து அது முதல் கலி 4250 கி. பி. 1149 சாலி 1071வது வருஷம்வரை 51வருஷகாலம் தலைக்காட்டை ஆண்டு கொண்டிருந்தனனென்று கொங்குதேச சரித்திராசிரியர் கூறுவர்.

இந்தத் திருநக்ஷத்திரத்திலே சாந்தாதேவியின் புருஷகாரத்தாலே தன்னை ஆஸ்ரயித்த இந்தக் கொங்குதேசத்தரசனுக்கு விஷ்ணுவர்த்தனனெனப் பெயரிட்டதும் அவன் மகளுக்குப் பிடித்திருந்த பிர்மராக்ஷஸை வெருட்டியதுமென்ப. இந்த விஷ்ணுவர்த்தனன் திருநாராயணன் ஸந்நிதியை கலி 4200 கி. பி. 1099 சாலி 1021வது வருஷம் கட்டிமுடித்ததாக அக்கோயிற் சிலாசாஸனம் தெரிவிக்கின்றது

. ராமாநுஜாசாரியார் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருந்த பன்னிரண்டு வருடங்களின் முற்பாதியிலே டில்லிக்குப் போய்ச் செல்வப் பிள்ளையை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து திருநாராயணனோடு கூடப் பிரதிஷ்டை செய்தது முதலிய கைங்கர்யங்கள் நிறைவேறியிருக்கவேண்டும்ராமாநுஜாசாரியார் திருநாராயணபுரத்திற் பன்னிரண்டு வருஷம் எழுந்தருளியிருந்தனரென்பது "ஆயிரத்துப் பத்தொன்பதனிலாங்கின்றும், போந்து பன்னீராண்டங்கண் புகழ்கான வளர்த்த பெருப்பூதூர் வேந்தன் என்ற பாட்டினுலும், "ஸ்ரீரங்க நகராத்தேவம் யாதவாத்ரிம் கதஸ்யமே, ஜயாநாவாஸஸ்யாஸ்ய கதா: த்வாதசவத்ஸரா:" "ஸ்ரீரங்க நகராதேதம் யாதவாத்ரிம் கதஸ்யமே, அநுநாவாஸாஸ்யாஸ்ய கதா: த்வாதசவத்ஸரா:" என்ற சுலோகத்தினுலும் நன்கு விளங்குதல் காண்க.

அன்றியும்கூரத்தாழ்வான *தர்சனத்துக்காகத் †தர்சனமிழந்த அநந்தாம் பராந்தகனென்ற கிராமத்திலே பெரிய நம்பியைப் பிரிந்த துக்கத்தாலே ஒருவருடமிருந்து பின்பு கோயிலுக்கெழுந்தருளி அழகிய மணவாளனைச் சேவிக்கும் பொருட்டுக் கோயிலுக்குள்ளே யெழுந்தருள அங்கு காவலாகவிருந்த ராஜபடர்கள் ராமாநுஜாசாரியார் சம்பந்தம பெற்றவர்களை உள்ளேவிடமாட்டோம்;நீர் ராமாநுஜாசாரியரது சம்பந்தத்தை இப்போது விட்டுவிட்டேனென்று சொன்னுல் கோயிலுக்குட் செல்ல அநுமதி தருவோம், என்று தடைய அதைக்கேட்ட ஆழ்வான் ராமாநுஜ ஸம்பந்தத்தை யிழந்து கோயி

* தர்சனம்—சமயம். † தர்சனம்—கண்.

லுக்குட் போய்ச் செய்யவேண்டிய தொன்றுமின்றென்று கூறிக் குவிதராய் உடனே அங்குநின்றும் புறப்பட்டுத்திருமாலிருஞ்சோலைமலைக் கெழுந்தருளி அங்கு பதினொருவருஷம் எழுந்தருளியிருந்த பின்னர் கோயிலுக் கெழுந்தருளிய ராமானுஜாசாரியார், கூரத்தாழ்வான் திருமாலிருஞ் சோலையில் எழுந்தருளி யிருக்கிறாரென்பதைக் கேட்டு அங்கெழுந்தருளி அவரைக் கூடவழைத்துக்கொண்டு கோயிலுக்குத்திரும்பி யெழுந்தருளின ரென்ற திவ்ய சரிதமும் பன்னிரண்டு வருஷம் யதுகிரியில் யதிராஜர் எழுந்தருளி யிருந்தனரென்பதை உறுதிப்படுத்துகிறது. கூரத்தாழ்வான் திருமாலிருஞ்சோலைமலையில் பதினொருவருடம் எழுந்தருளியிருந்தன ரென்பதை,'

> "கன்றங்கிருந்தவருட்கூரத்தாழ்வர்னன்னீராக்கமுற
> வன்றங்கிருந்தாரெதிராசரடியார்தலையுள்வீடோமென்னச்
> சென்றுதிருமாலிருஞ்சோலைச்செல்வரடியைத்தினமுந்தாழ்ந்
> தொன்றுமழகுமிகுமங்கனொழிவில்பதினோராண்டிருந்தான்.

என்ற இராமானுஜார்ய திவ்ய' சரிதை மேற்கோட்பாடல் விளக்கிக் காட்டியதறிக.

91வது திருநக்ஷத்திரமாகிய கலி 4209 கி. பி. 1108 சாலி 1030வதான ஸர்வதாரி வருஷத்தில சென்னிகுலோத்துங்கனென்னும் கிருமிகண்டன் புழுத்துப்புரண்டதும் ராஜராஜனது முடிசூட்டும் நடந்திருத்தல் வேண்டுமென்ப. கோயிலுக்கு, கூரத்தாழ்வானது யோகக்ஷேமங்களை விசாரிக்க வந்திருந்த மாருதிச் சிறியாண்டான் விசாரித்துக்கொண்டு திரும்பிப்போய்க் கிருமிகண்டனை இறந்தொழிந்தானென்பதைச் சொல்லக் கேட்டு மஹாசந்தோஷ சித்தராய் அந்தத் திருநாராயண புரத்தைச் சேர்ந்த இடங்களில் பஞ்சநாராயண ப்ரதிஷ்டை செய்வித்ததுமன்றி அங்குள்ளார் ப்ரார்த்தனையின்படி தன்னை அர்ச்சாரூபியாகவும் ப்ரதிஷ்டைசெய்வித்ததும் அவ்வருடத்தேயாம்.

92வது திருநக்ஷத்ரமான கலி 4210 கி. பி. 1109 சாலி 1031வதான விரோதி வருஷத்தில் திருநாராயண புரத்திலிருந்து கோயிலுக்குத் திருமபி யெழுந்தருளி அழகிய மணவாளனை மங்களாசாசனம் செய்தருளியது.

இவ்வநுஷத்திலே கிருமிகண்டனது குமாரனான ராஜராஜ குலோத்துங்கன் மிக்க சந்தோஷத்தோடும் ராமாநுஜாசார்யாரை யணுகி அடிபணிந்தெழுந்து தமப்பனார் செய்த மஹாபராதங்களை யும் க்ஷமிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டதுமன்றி என்னையும் அடிமைகொண்டு உஜ்ஜீவிக்கும்படி செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவ்விராஜராஜனைக் கிருபையாலே கடாக்ஷித்து முதலியாண்டான் திருவடிகளை ஆச்ரயிக்கும்படி நியமித்தருளினர். அவனும் அவ்வாறே ஆச்ரயித்து தமக்கிருந்த கோயில் அதிகாரம் முழுவதையும் முதலியாண்டானுக்குத் தாராபூர்வகமாகத் தானஞ் செய்தனன்.

அது முதல் வைணவமதத்திலே மிகப் பற்றுடையவனாய்த் தமது தமப்பனான கிருமி கண்டனாலே க்ஷீணதசையை யடைந்திருந்த வைணவசமயம் பழையபடியே மிகவு மேலாகும்படி பாது காத்து வந்தனன். இதனை "விழுந்தவரி சமயத்தை மீளவெடுத்து" என்னு மிவ்விராஜனது மெய்க்கீர்த்தி மெய்பாக விளக்கியது காண்க' இதுமுதல் 97வது திருநக்ஷத்திரம்வரை கோயிலிலேயே யெழுந்தருளியிருந்து முதலியாண்டான் கூரத்தாழ்வான் முதானவர்களுக்கு வேதாந்த காலக்ஷேபஞ் சாதித்தருளின ரென்பர்.

98வது திருநக்ஷத்திரமான கலி 4216 கி பி. 1115 சாலி 1037 வதான மன்மதவருஷத்தில் ஸ்ரீ பாஷ்யத்தில் பாக்கியிருந்த 3ல் ஒரு பங்கையும் பூர்த்தி செய்தருளியது. இதனை

"இன்னவாறு திருப்பதிகளெங்கும்வாழ்வித்தெதிராஜன்
தன்னதாக்கித் தரிசனமுந்தரணியெங்கும்விளங்குவித்து
முன்னமுரைத்தபாடியத்தின்குறையாமூன்றத்தொருகூறு
தன்னைச்சகவாண்டாயிரத்துமுப்பத்தேழிற்சாற்றினன்(க)

என்ற திவ்ய ஸூரிசரிதை மேற்கோட்செய்யுளாலறிக இந்த98வது திருநக்ஷத்திரம் முதல் 104வது திருநக்ஷத்திரம் வரை முன்போலவே கோயிலில் வேதாந்த காலக்ஷேபஞ் செய்துகொண் டெழுந்தருளியிருந்தனர்.

105வது திருநக்ஷத்ரமான கலி 4223 கி. பி. 1122 சாலி 1044 வதான சுபகிருதுவருஷத்தில் பட்டர் திருவவதரித்தருளியது. முன்

போலவே 109வது திருநக்ஷத்ரம்வரைகோயிலிலேயேகாலக்ஷேபஞ் சாதித்துக்கொண்டெழுந்தருளியிருந்தனர்.

*110வது திருநக்ஷத்ரமான கலி 4228 கி. பி. 1127 சாலி 1049 வதான பிலவங்க ௵த்தில் தில்லைக் கோவிந்தராஜனைக் கீழைத் திருப்பதியிலே யாவரும் ஸேவிக்கும்படி ஓர் கோயில கட்டுவித்துப் பிரதிஷ்டை செய்தருளவேணுமென்று திருவுள்ளம்பற்றிக் கோயினின்று மங்வனை போந்தருளிக் கத்தியதேவனென்னும் யாதவராயனைக் கொண்டு கோயில் கட்டுவித்துப் பிரதிட்டை செய்வித்து

> “தென்றில்லைச்சித்திரகூடத்தெஞ்செல்வனை
> மின்னிமழைதவழும் வேங்கடத்தெம் வித்தகனை”

என்று ஆழ்வாரருளிச்செய்த பொய்யில் பாடல் பலித்ததேயென்று பரம சந்தோஷித்தராய்

> “நற்றிருவாமூர்தில்லைநாராயணப்பெருமாள்
> சித்ரமணிப்பொற்கூடஞ்சேருநாள்—சத்தியமே
> நானூற்றின்மேல்வருடநான்மூன்றுசென்றதற்பின்
> வானோர்தொழவாழ்வர்வந்து” என்று அதாவது

இதுமுதல் 412வது ௵த்தில் தில்லைத்திருச்சித்ரகூடத்தில் முன்னரறிதுயிலமர்ந்தருளிய விடத்தில் ஸ்திரராய் முன்போலவே யாவருக்குச் சேவை சாதித்துக்கொண்டு த்விகுணமாக வாழ்ந்தருளுவரென்று மங்களாசாசனஞ் செய்தருளியது. கீழைத் திருப்பதியிற் கோயில் கட்டித் தில்லைக்கோவிந்தராஜனைப் பிரதிட்டை செய்வதற்கு வேண்டிய உபகாரங்களை உழுவலன்போடுஞற்றிய கத்தியதேவராயனென்பான கி. பி. 1126ல் பட்டத்துக்கு வந்தவனெனச் சிலாசாசனங்களாற் றெரிகின்றது என்ப. பட்டமெய்திய ஒரு வருஷத்துக்குப் பின் இந்தப் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கிறது.

இராமாநுஜாசாரியார் செய்தருளிய மங்களாசாசனத்தின் படியே கி பி 1530ல் பட்டம் பெற்று கி. பி. 1542வரை அதாவது பன்னிரண்டு௵ அரசாட்சி புரிந்த அச்சுததேவராஜனென்பான் கி. பி. 1539ம௵ மேமீ 31உ பழையபடியே தில்லைத் திருச்சித்திரகூடத்திருந்த இரத்தினசபையெனலும் பேரம்பலத்தைச் செவ்விதாகக்கட்டி அங்கே கோவிந்தராஜனைப் பிரதிட்டை செய்வித்தனனென்பர் இவ்விஷயம் மேறகுறித்த தில்லைச் சிற்றம்பலத்துள்ள நடராஜன் சந்நிதி முதற் பிராகாரத்தின் கீழைப்பத்தியிலுள்ளபித்திவரிக்கல்லிற்றெளிவாகப் பொறிக்கப்பட்டுளது.

கீழைத்திருப்பதியில் தில்லைக் கோவிந்தராஜனைப் பிரதிட்டை செய்வித்தது கி.பி. 1127வது வருஷமானபிலவங்கவருஷம்ஆகும். இதனோடு இராமாநுஜாசாரியார் மங்களாசாசனப்படி 442வருஷங்களைக் கூட்ட கி. பி. 1539௵ ஆதல் காணத்தக்கது அப்பால இராமாநுஜா

சாரியார் கிழைத்திருப்பதியினின்றுங் கோயிலுக்கெழுந்தருளிப் பன்னீராயிரம் சிஷ்ய சம்பத்தோடு கூட "ஸ்ரீரங்கராஜோஜயது ஸ்ரீரங்கம்வர்த்தது" என்று மங்களாசாசனஞ் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தனர்

120வது திருநக்ஷத்திரமான கலி 4238 கி. பி. 1137 சாலி 1059வதான பிங்கள௵ மாசி௴ 28௳ சனிக்கிழமை சுக்லபக்ஷ நவமியில் பரமபதித்தருளினர். இதனை,

இந்த *இராமாநுஜார்ய திவ்ய சரிதச் சுருக்கத்திலே ஸ்ரீவைணவ சமயத்தில் அதிகத் துவேஷமும் சைவசமயத்தில் மிகவும் பிரியமுமுடைய கிருமிகண்டனெனபான் சோழ வம்ச சரிதநூலார் முதலியோர் சொல்லுகிறபடி கலிங்கம் வென்று பரணிகொண்ட உபயகுலோத்தமனாகிய 1வது குலோத்துங்கனில்லையென்பதும், அழகிய மணவாளனிடத்து மவனடியார் திறத்தும் ஆராதகாத லுடையனுப் பெரியகோயிலில் திருமதிலெடுத்தல் முதலியவநேக திருப்பணிகள் செய்தது அகளங்க நாட்டாழ்வாரென்றும் விக்கிரம சோழனதுமகனும், அநபாயனென்றும், செனனிகுலோத்துங்கனென் னும் பெயர்பெற்ற இரண்டாவது குலோத்துங்கனே யெனபதும், 1-வது குலோத்துங்கன் மகன் விக்கிரமனும் அவன் மகன் கிருமிகண்டனும், அவன் மகன் இராஜ இராஜனும், இன்னின்ன ௵த்திற் பட்டத்துக்கு வந்து இவ்வித்தனை ௵ ஆண்டு மாண்டன ரென்பதும், பித்திதேவன் என்றும் விட்டலதேவராயன் இன்னின்ன ௵த்தில் விண்டுவர்த்தனனென்று பெயர்பெறறுத் திருநாராணபுரக் கோயிலைக் கண்டு பிடித்துப் பழையபடி யக்கோயிலைக் கட்டித் திரு நாராயணனைப் பிரதிட்டை செப்வித்தனனென்பதும், பெரிய நம்பி ஆளவந்தார் முதலிய சில பூர்வாசாரியர்களுடைய கால நிர்ணயம் ஒருவாற்றானும் மறுக்கமுடியாதென்பதும், கிருமிகண்டன் சித்திர கூடத்தை யிடித்து மன்றுக்கிடங் கண்டது பெரிய நம்பி பரமபதித்த ௵த்திலேயென்பதும், 12வது நூற்றாண்டின் நாலாவது பாகத்திற் பிரபலமாகக் கட்டி முடிக்க ஸ்ரீரங்கம் உடையவர் சந்நிதிக்கடுத்த முன் பக்கத்துப் பிரகாரத்துத் தென்சுவரின் கீழ்புறத்திலுள்ள சாசனத்துக் கண்டவர்கள் இராமாநுஜாசாரியாரின் பிரதிபக்ஷ விசன சீலனை அகளங்க நாட்டாழ்வாரது வேலைக்காரர்களென்றும், திருவானைக்கா கோயிலின் கீழ்புறத்துள்ள வலது உட்கோபுரத் தின்[illegible]தென பக்கத்தில் காணப்படுகிற உடன படிக்கையிற் சொல்லப் பட்[illegible] அகளங்கநாடாள்வார் மேற்கூறிய அகளங்க நாட்டாழ்வா ரல்லவென்பதும் இராமாநுஜாசாரியார் சத்ய தேவராயனென்னும் யாதவனைக் கொண்டு கிழைதிருப்பதியிலொரு கோயில் கட்டுவித் தக கோவிந்தராஜனைப் பிரதிட்டை செய்வித்ததாகச் சொல்லப் படுகிற காலம், ஒருவாற்றானும் மறுக்கமுடியாதென்றெனபதுவும், இனிது விளங்குதல் காண்க!